REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 20 விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் : 344 ஐப்பசி 24 ஆம் நாள் திங்கட்கிழமை 09 நவம்பர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

# 10,000 கடந்தது மூன்றாம் அலை; இன்று திறக்கப்படுகிறது நாடு!

## நேற்றும் 510 பேர் தொற்றுடன் அடையாளம்

கொழும்பு, நவம்பர்.9

கொரோனாத் தொற்றின் மூன்றாம் அலையால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்தைக் கடந்துள்ளது. அதேவேளை, மேல்மாகாணம் மற்றும் நாட்டின் பிற பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் இன்று அதிகாலையுடன் நீக்கப்படுகின்றது என்று கொரோனா ஒழிப்புச் செயலணியின் தலைவரும், இராணுவத் தளபதியுமான லெப்டினென்ட் ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார். 18 ➤

## கொரோனா சாவு 35ஆக அதிகரிப்பு

### வயோதிபர் ஒருவர் நேற்று உயிரிழப்பு

கொழும்பு, நவ.9

இலங்கையில் கொரோனாத் தொற்றால் நேற்றும் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

78 வயதுடைய ஆண் ஒருவரே சுகயீனம் கார 18 ➤

## முல்லை. கல்வி வலயத்தில் அதிகாரிகள் பற்றாக்குறை

18 ➤

## மிரட்டுகிறது வெலிக்கடை!



### திடீரென எகிறுகின்றது தொற்றாளர் எண்ணிக்கை

- 89 பெண் கைதிகள்
- 11 ஆண் கைதிகள்
- சிறை அதிகாரி ஒருவர்
- ஊழியர் ஒருவர்

கொழும்பு, நவ.9

கொழும்பு, வெலிக்கடைச் சிறைச்சாலையில் மேலும் 72 கைதிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. வெலிக்கடைச் சிறைச்சாலையில் ஏற்கனவே சிறைச்சாலை அதிகாரி ஒருவருக்கும், கைதிகள் 29 பேருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து அங்கு 18 ➤

## பைடன், கமலா தமிழரின் நம்பிக்கை நட்சத்திரங்கள்



### இலங்கையில் தீர்வு ஏற்பட உதவுவர் என இரா. சம்பந்தன் தெரிவிப்பு

கொழும்பு, நவ.9

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக ஜோ பைடனும், உப ஜனாதிபதியாக கமலா ஹரிஷும் தெரிவு செய்யப்பட்டமை மிகவும் வரவேற்கத்தக்க விடயம். இதையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சினைகள் தொடர்பில் நாங்கள் இவர்களுடன் தொடர்புகொண்டு பேசுவோம். இலங்கையில் அதியுச்ச அதிகாரப் பகிர்வின் அடிப்படையில் உறுதியான மீளப் 18 ➤

*முச்சந்தி முரளி*



"ஒருவேளை கொரோனாவை ஜெயிலுக்க வைச்சு பூட்டத்தான் அங்கயும் பரப்பினச்சினமோ தெரியேலை"



## 5, 711 கிலோ மஞ்சள் மன்னாரில் பறிமுதல்

### கொரோனா புண்ணியத்தில் தப்பித்த இந்தியர்கள்

மன்னார், நவ.9

இந்தியாவில் இருந்து கடத்தப்பட்ட 5 ஆயிரத்து 711 கிலோ மஞ்சள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இலங்கையைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், மஞ்சள் கடத்தப் 18 ➤

## காலமானார் சுபினே நந்தி!



கொழும்பு, நவ.9

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான முன்னாள் வதிவிடப் பிரதிநிதி சுபினே நந்தி நேற்றுக் காலமானார். 18 ➤

## குளத்துக்குள் இருந்து கடவுள் சிலைகள் மீட்பு

யாழ்ப்பாணம், நவ.9

வட்டுக்கோட்டை, சங்கானை ஓடக்கரை நாக தம்பிரான் ஆலயத்துக்கு அருகில் உள்ள குளம் ஒன்றில் இருந்து கடவுள் சிலைகள் நேற்று மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. பொலிஸாருக்கும், இராணுவத்தினருக்கும் கிடைத்த தகவல் 16 ➤

## கிராம அலுவலர் கொலை விசாரணையில் திருப்பம்

### சக அலுவலரின் கணவர் கைது

மன்னார், நவ.9

மாந்தை மேற்கு பிரதேச செயலக நிர்வாகக் கிராம அலுவலர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். மாந்தை மேற்கு பிரதேச செயலக பெண் கிராம அலுவலர் ஒருவரின் கணவரும், அவரது உறவி 18 ➤

## விபத்தில் மூவர் காயம்!

கிளிநொச்சி, நவ.9

வீதியில் பயணித்துக் கொண்டிருந்த டிப்பர் வாகனம் திடீரென நிறுத்தப்பட்டதால், டிப்பருக்குப் பின்புறமாக வீதியில் பயணித்துக் கொண்டிருந்த முச்சக்கரவண்டி டிப்பருடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து நேற்று இரவு 7 மணியவில் கிளிநொச்சி வலயக் கல்வி அலுவல 15 ➤



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தமிழர்களின் பிரச்சினைக்கு கரிசனை காட்டல்வேண்டும்!



*பைடன், கமலாவுக்கான வாழ்த்தில் முன்னாள் எம்.பி. சரா கோரிக்கை!*

யாழ்ப்பாணம், நவ. 9

அமெரிக்காவின் 46ஆவது ஜனாதிபதியாகத் தெரிவாகியிருக்கும் ஜோ பைடன் மற்றும் துணை ஜனாதிபதியாகத் தெரிவாகியிருக்கும் கமலா ஹரிஸ் ஆகியோர் தம் ஆட்சிக்காலத்தில் ஈழத் தமிழர்களின் விவகா ரத்தில் கூடுதல் கரிசனையுடன் செயற்பட வேண்டும் என்று தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ஈஸ்வரபாதம் சரவணபவன்.

அவர் அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

அமெரிக்காவின் ஜனாதிபதியாக ஜனநாயகக் கட்சியின் ஜோ பைடனும், துணை ஜனாதிபதியாக தமிழ் வம்சாவழியைச் சேர்ந்த கமலா ஹரிஸும் தெரிவாகியுள்ளனர். இவர்கள் தம் ஆட்சிக்காலத்திலாவது ஈழத் தமிழர்களுக்கு ஒரு விடிவைத் தரவேண்டும் என்பதே தமிழ் மக்களின் பெரு விருப்பமாக உள்ளது.

ஒபாமாவின் ஆட்சிக்காலத்தில் துணை ஜனாதிபதியாகப் பணியாற்றிய பைடன் கறுப்பினத்தவர்களின் விவகாரத்தில் அன்றுமுதல் இன்றுவரை கூடுதல் கரிசனையுடன் செயற்பட்டவர். ஒடுக்கப்பட்ட மக்களுக்காக பல சந்தர்ப்பங்களில் குரல் கொடுத்தவர்.

அவருடன் தமிழ் வம்சா வழியைச் சேர்ந்த கமலா ஹரிஸ் இணைந்து துணை ஜனாதிபதியாகப் பதவியேற்றுச் செயற்படவுள்ளார்.

ஆக, சிறுபான்மை மக்களுடன் நெருங்கிச் செயற்படக் கூடிய வகையிலும், அவர்களின் துன்பங்களைப் புரிந்துகொள்ளக்கூடியவர்களாகவும் பைடன் கமலா கூட்டணி உள்ளது. இந்தக் கூட்டணியாவது தமது கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்க வேண்டும் என்பதே ஒடுக்கப்பட்ட மக்களினதும் ஒட்டுமொத்தத் தமிழர்களினதும் தற்போதைய எதிர்பார்ப்பாகும் என்றுள்ளது. (ம-இ)

## அமெரிக்காவுடன் இணைந்து பணியாற்ற இலங்கை தயார்

*வாழ்த்துச் செய்தியில் மஹிந்த*



கொழும்பு, நவ. 9

'இலங்கை மற்றும் அமெரிக்கா ஆகிய இரு நாடுகளுக்கும் பயனளிக்கும் வகையில் இரு நாட்டு உறவுகளைத் தொடர்ந்து மேம்படுத்த இணைந்து பணியாற்ற ஆவலுடன் உள்ளோம்' என பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜோ பைடன் மற்றும் துணை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கமலா ஹரிஸ் ஆகியோருக்கு தனது ருவிட்டர் பதிவில் வாழ்த்துக்களைத் தெரிவித்த பிரதமர் மேற்படி தெரிவித்துள்ளார்.


மேலும், அமெரிக்காவின் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜோ பைடன் மற்றும் துணை ஜனாதிபதியான கமலா ஹரிஸ் ஆகியோருக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். (ந-இ)

## பி.சி.ஆர் தொடர்பான அரசின் தீர்மானம்: நாட்டை மோசமானநிலைக்குத் தள்ளும்

*எச்சரிக்கை விடுக்கின்றது ஐ.தே.க*

கொழும்பு, நவ. 9

**பி.சி.ஆர் பரிசோதனை தொடர்பில் அரசு மேற்கொண்டுள்ள தீர்மானம் நாடு மிகமோசமான அழிவை நோக்கிச் செல்வதற்கான ஆரம்பமாகவே அமையும் என்று ஐக்கிய தேசியக் கட்சி எச்சரித்துள்ளது.**




இதுதொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியினால் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பத்து நாள்களுக்குப் பின்னர் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டமைக்கான அறிகுறிகள் எவையும் தென்படாதவர்களை, பி.சி.ஆர். பரிசோதனையின்றி மீண்டும் வீடுகளுக்கு அனுப்பிவைப்பதற்கு அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் தீர்மானம் மிகமோசமான நிலைக்கான ஆரம்பமாகவே அமையும்.

அவ்வாறான தீர்மானமொன்றை மேற்கொள்வதற்குக் காரணமாக அமைந்த ஏற்றுக்கொள்ளப்பட்ட விஞ்ஞானபூர்வமான அறிக்கையை மக்களுக்குப் பகிரங்கப்படுத்துவது அரசின் பொறுப்பாகும். அதேபோன்று தனிமைப்படுத்தல் ஊரடங்கு நீக்கப்பட்டதும் மக்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும் அரசின் பொறுப்பாகும். கொரோனா வைரஸ் பரவல் தொடர்பில், அதனைத் தடுப்பதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பிலும் ஜனாதிபதி, இராணுவத்தளபதி, தொற்றுநோய்த்தடுப்புப் பிரிவின் பணிப்பாளர், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் உள்ளிட்டோரால் வெளியிடப்படும் கருத்துக்கள் பலவும் ஒன்றுக்கொன்று முரணானவையாகவே இருக்கின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

## பைடன் – கமலா வெற்றிக்கு இலங்கை ஜனாதிபதி வாழ்த்து




கொழும்பு, நவ.9

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்டியுள்ள ஜனாநாயகக் கட்சியின் வேட்பாளர் ஜோ பைடனுக்கு இலங்கை ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்ச வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ருவிட்டரில் பதிவிட்டுள்ளதாவது,

வரலாற்று ரீதியான வெற்றிக்கு பைடனுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இருநாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்த நெருங்கிச் செயற்பட விரும்புகிறேன்.

மேலும் மற்றொரு பதிவில், இலங்கை அரசாங்கத்தினதும் நாட்டு மக்களினதும் சார்பில் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட ஜோ பைடனுக்கும் துணை ஜனாதிபதியாத் தெரிவுசெய்யப்பட்ட கமலா ஹாரிஸுக்கும் கோத்தாபாய ராஜபக்ச வாழ்த்துத் தெரிவித்துள்ளார். (வ-இ)

## கேகாலை மாவட்டத்தையும் முடக்குவதற்குத் தீர்மானம்?



கேகாலை, நவ. 9

கேகாலை மாவட்டத்தை முழுமையாக முடக்கு வது தொடர்பில் ஆலோசித்து வருவதாக கேகாலை மாவட்டச் செயலாளர் மஹிந்த எஸ்.வீரசூரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மாவட்டத்தில் கொரோனாத் தொற்று அதிதீவிரமாக நாளுக்குநாள் பரவிவருகின்றது. மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதான நகரங்களையும் மையப்படுத்திய பிரதேச செயலகங்களில் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதில் அதிகமான தொற்றாளர்கள் மாவனல்லை பிரதேசத்தில் இனங்காணப்பட்டுள்ளனர். பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியில் வருவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். இல்லையென்னால் நிலைமை மேலும் மோசமடையும் எனத் தெரிவித்துள்ளார். (ந-இ)

## தனிமைப்படுத்தப்பட்ட குடும்பத்துடன் முறுகல்

*6 குடும்பங்களைச் சேர்ந்த 8 பேர் கட்டாயத் தனிமை*

பருத்தித்துறை, நவ. 9

பருத்தித்துறையில் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பம் ஒன்றுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட 6 குடும்பங்களைச் சேர்ந்த 8 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்.

குறித்த குடும்பத்தினர் மருத்துவத் தேவைக்காக மேல் மாகாணத்துக்குச் சென்று திரும்பியுள்ளனர். இதையடுத்து சுகாதார அறிவுறுத்தல்களின் அடிப்படையில் அவர்கள் தற்போது கட்டாயத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நிலையிலேயே தனிமைப்படுத்தப்பட்ட குடும்பத்தினருடன் சிலர் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அவ்வாறு வாக்குவாதத்தில் ஈடுபட்ட 6 குடும்பங்களைச் சேர்ந்த 8 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர். (ம-26)

# மேல் மாகாண ஊரடங்கு நீக்கப்படுகிறது இன்று

**கொழும்பு, நவ. 9**

**மேல் மாகாணம் மற்றும் நாட்டின் பிற பகுதிகளில் விதிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு நாளை (இன்று) அதிகாலை 5 மணிக்கு நீக்கப்படும் என்று இராணுவத் தளபதி லெப்டினென்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவித்ததாவது:

மட்டக்குளி, மோதரை, வாழைத் தோட்டம், கொட்டாஞ்சேனை, வெல்லம்பிட்டி, ஆட்டுப்பட்டித் தெரு, பொரளை, புளுமெண்டல், கரையோர பொலிஸ் பிரிவு, மாளிகாவத்தை, தெமட்டகொட, கிராண்ட்பாஸ் ஆகிய 12 பொலிஸ் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக இருக்கும்.

கம்பஹா மாவட்டத்தில் வத்தளை, பேலியகொட, கடவத்த, ராகம, நீர்கொழும்பு, பமுனுகம, ஜா எல, சப்புகஸ்கந்த பொலிஸ் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக இருக்கும். களுத்துறை மாவட்டத்தின் ஹொரணை, இங்கிரிய பொலிஸ் பிரிவுகளும் வேக்கட கிராம சேவகர் பிரிவும் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக இருக்கும். இதேவேளை, குருநாகல் நகரசபைக்குட்பட்ட பகுதிகள் மற்றும் குளியாப்பிட்டி பொலிஸ் பகுதிகள் ஆகியவை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

கேகாகலை மாவட்டத்தில் மாவனெல்லை மற்றும் ருவன்வெல்ல பொலிஸ் பகுதிகளும் தனிமைப் படுத்தப்பட்டுள்ளன. அத்துடன், கொழும்பின் சில தொடர்மாடி குடியிருப்புகள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்படவுள்ளன.

மட்டக்குளியின் மெத்சந்த செவன, மிஹிஜயசெவன, மோதரையின் ரண்முத்து செவன, கிராண்ட்பாஸின் முவதொர உயன, தெமட்டகொடையின் சிறிசந்த உயன, மாளிகாவத்தையின் தேசிய வீடமைப்புத் திட்டம் போன்ற தொடர்மாடிகளில் இருந்து எவரும் வெளியே செல்லவோ உள்ளே வரவோ அனுமதியில்லை - என்றார். (ம-இ)

## மின்னல் தாக்கி முதியவர் சாவு

கேகாலை, நவ.9

கேகாலை மாவட்டத்தில் மின்னல் தாக்கியதில் 67 வயதுடைய ஒருவர் உயிரிழந்துள்ளார். கேகாலை மாவட்டத்தின் பல பகுதிகளில் நேற்றுமுன்தினம் மழையுடன் கூடிய வானிலை நிலவியது.

இதன்போது, லெவல லயன் குடியிருப்புக்கு அருகில் நின்றுகொண்டிருந்த அந்த நபர் மின்னல் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மின்னல் தாக்கத்தினால் லயன் குடியிருப்புகளின் சில வீடுகளிலுள்ள மின் சாதனங்களும் சேதமடைந்துள்ளன. (வ-இ)

## வீட்டில் நானாகவே தனிமையானேன்

*கூறுகின்றார் வலி.கிழக்கு தவிசாளர்*

யாழ்ப்பாணம், நவ. 9

அமைச்சர்கள் கலந்துகொண்ட உயர்மட்ட அபிவிருத்திக் கலந்துரையாடலில் எமது பிரதேச விடயங்களை முன்வைப்பதற்காகப் பிரதேச சபையின் நிறைவேற்று அதிகாரி என்ற வகிபாகத்துடன் கிடைக்கப்பெற்ற அழைப்பில் நான் கலந்துகொண்டேன் என்று வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) பிரதேச சபைாட ாவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

என்னைத் தனிமைப்படுத்துவதற்கான உத்தியோகபூர்வ பரிந்துரை எதுவும் கிடைக்கப் பெறாத போதும் என்னால் எவருக்கும் தற்சமயம் கூட பாதிப்பு ஏற்படக் கூடாது என்ற எண்ணத்தில் உரிய மருத்துவப் பரிந்துரைகள் கிடைக்கும் வரையில் அதிகவனத்துக்கும் சுயதனி மைப் படுத்தலுக்கும் உட்படுத்திக் கொண்டுள்ளேன்.

இந்த நிலையில் தொலைபேசி வாயிலாகவே வீட்டில் இருந்தவாறு பணியாற்றுகின்றேன். தவிசாளர், செயலாளரைத் தனிமைப்படுத்தப்பணிப்பு என்று வெளியான செய்திகளையடுத்து இந்தத் தகவலை தெரிவிக்கின்றேன் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (த-இ)

### கொழும்பு துறைமுகநகரில்

## மேலும் ஒரு பில்லியன் முதலிடவுள்ளது சீனா



கொழும்பு, நவ.9

கொழும்பு துறைமுக நகரில் மேலும் ஒரு பில்லியன் முதலீட்டை ஹொங்கொங்கை தளமாகக் கொண்டு இயங்கும் ஐ.எப்.சி. எனப்படும் சர்வதேச நிதி மையம் மேற்கொள்ளவுள்ளது.

சர்வதேச நிதி மையத்தின் முதலீடுகளை சுதந்திரமாக மேற்கொள்ளும் பொருட்டு சட்டவாக்க வரைவுகளை அரசாங்கம் தற்போது முன்னெடுத்து வருகிறது.

இதையடுத்து இம்மாத இறுதிக்குள் நாடாளுமன்றத்தில் அதற்கான அங்கீகாரம் பெறப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதையடுத்து சர்வதேச நிதி மையம் தனது முதலீடுகளை 2021 ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து மேற்கொள்ளவுள்ளது. இந்த முதலீடுகள் துறைமுக நகரத்தின் ஒட்டுமொத்த திட்டங்களி னதும் முன்னோடித் திட்டமாக அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை கொழும்பு துறைமுக நகரத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஆறு ஆண்டுகள் நிறைவ டைந்துள்ளன. இதன் புதிய முகாமைத்திட்ட பணிப்பாளராக ராஜா எதிரிசூரிய கடந்த முதலாம் திகதி நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## கொரோனாவிலிருந்து மீள சிறப்பு வழிபாடுகள்



### யாழ்ப்பாணத்தில்

புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய நாட்டு மக்களுக்கு அருளாசி வேண்டி யாழ். மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் யாழ். நாகவிகாரையில் விசேட வழிபாடு நடத்தப்பட்டது.

இவ் வழிபாட்டில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி, வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர், யாழ். மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர், இராணுவ உயர் அதிகாரிகள் மற்றும் பொலிஸார் கலந்துகொண்டனர். (ந-இ)

★ ★ ★



### வவுனியாவில்

வவுனியா, நவ.9

கொரோனோத் தொற்றிலிருந்து இலங்கை மக்கள் விடுபட வேண்டி வவுனியா இறம்பைக்குளம் அந்தோனியார் தேவாலயத்தில் விசேட ஆராதனை இடம்பெற்றது.

கொரோனா நெருக்கடியிலிருந்து விடுபட நாட்டுக்கும் உலகமக்களுக்கும் ஆசி கோரி விசேட பிரார்த்தனை வழிபாடுகளில் ஈடுபடுமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஸவால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இதற்கமைய இந்த விசேட ஆராதனை இடம்பெற்றது. இதில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான், வவுனியா மாவட்டச் செயலாளர் சமன்பந்துலசேன, வன்னி பிரத பொலிஸ்மா அதிபர் லால் செனவிரத்தின, வவுனியா பிரதேச செயலாளர் கமலதாஸ், செட்டிக்குளம் பிரதேச செயலாளர் சிவகரன், வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி யூட் பீரீஸ், வவுனியா பொலிஸ் நிலைய பொலிஸ் அதிகாரி மானவடுவ, மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு அதிகாரி ஜோன்ஹென்னடி, என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (வ-ரி3)

★ ★ ★



### மட்டக்களப்பில்

வரலாற்று சிறப்புமிக்க மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை ஸ்ரீமத் ம்ருத்யுஞ்ஜய ஹோமம் நடத்தப்பட்டது.

பிரதமரின் வேண்டுகோளுக்கமைய புத்தசாசன அமைச்சு மற்றும் இந்து கலாசார திணைக்களம் ஆகியவற்றின் ஒழுங்கமைப்பில் இந்த மகா ஹோமம் நடத்தப்பட்டது. கொரோனாத் தொற்று நீக்கி நாடு சுபீட்சமடைய வேண்டும் என இதன் போது பிரார்த் தனை செய்யப்பட்டது. (ந -இ)

# அரச சந்தைப்படுத்தல் சபைகளுக்கு நெல் தந்தால்தான் நிவாரண உரம்

## சுற்றறிக்கை வெளியிட்டது அமைச்சு

**கொழும்பு, நவ.9**

**பெரும்போக நெற்செய்கையின் அறுவடையில் குறித்த ஒரு பகுதியை அரச நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு விற்பனைசெய்யும் விவசாயிகளுக்கே 2021ஆம் ஆண்டுக்கான சிறுபோக நிவாரண உரங்கள் வழங்கப்படவேண்டும் என்று உர உற்பத்தி மற்றும் வழங்கல்கள், இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினி பாவனை ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சு சுற்றறிக்கை மூலமாக அறிவித்துள்ளது.**

இந்தவருடம் 2020 - 2021 பெரும்போக நெற்செய்கையின் போது எவரேனும் ஒரு விவசாயி ஒரு ஹெக்ரேயர் (2.5 ஏக்கர்) அல்லது அதற்கு அதிகமான நிலங்களில் நெற்செய்கை மேற்கொள்ளும்போது, நெல் உர நிவாரண நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிவாரண உரங்களை 300 கிலோகிராம் அல்லது அதற்கும் அதிகமான அளவுகளில் பெற்றுக் கொள்கின்றனர். அவர்கள் தாம் அறுவடை செய்யும் நெல்லில் ஆகக்குறைந்தது ஆயிரம் கிலோகிராம் அல்லது அதற்கு அதிகமான அளவை அல்லது விவசாயிகளின் விருப்பப்படி அதற்கதிகமான அளவு நெல்லை அரச நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு கட்டாயமாக வழங்க வேண்டும்.

அவ்வாறு நெல்லை வழங்கிய மைக்கான பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொண்ட விவசாயிகளுக்கு மாத்திரமே 2021 சிறுபோகத்துக் கான நிவாரண உரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று சுற்றறிக்கைத் திருத்தம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என்று கமநல அபிவிருத்தித் திணைக்கள பிரதி ஆணையாளர் கே.ஜகன்நாத் தெரிவித்துள்ளார். (த-இ)

# பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கவும்

## கடற்றொழிலாளர் இணையத்தின் மன்னார் கிளை கோருகின்றது

மன்னார், நவ. 9



மன்னார் மாவட்ட மீனவர்கள் கடற்றொழிலை மேற்கொள்வதில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண கூட்டம் ஏற்பாடு செய்யவேண்டும். இதற்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் மாவட்டத் தலைவர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.


மன்னாரில் உள்ள இணையத்தின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றோம். ஆனால், பிற மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் மன்னாரில் சுதந்திரமாக மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மன்னார் மாவட்ட மீனவர்கள் அட்டை மற்றும் சங்கு பிடிப்பதில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

ஆனால் குறித்த தொழிலுக்கு அரசு தற்போது தடை விதித்துள்ளது. இந்தத் தொழிலை சிலிண்டர் மூலம் அலங்கார மீன் பிடித்தல் என்ற வகையில் அதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

சாதாரண மீன்பிடித் தொழிலாளர்களுக்கு குறித்த தொழிலை மேற்கொள்ள அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதனால் அரசு வட பகுதி மக்களை பாராமுகமாகப் பார்க்கின்றது. இந்தப் பிரச்சினைகளைக் கதைப்பதற்கு விசேட கூட்டம் ஏற்பாடு செய்யப்படவேண்டும். என்றார். (த-56)



# கொரோனா, டெங்கு இரண்டும் உள்ள நோயாளி அவதானிப்பு

கொழும்பு, நவ. 9

நாட்டில் டெங்கு மற்றும் கொரோனா இரண்டும் இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்ட முதல் நோயாளி நீர்கொழும்பு மருத்துவமனையில் அடையாளம் காணப்பட்டுள்ளார். 29 வயதுடைய ஒருவரே இவ்வாறு இரட்டைநோய் தொற்றுக்கு உட்பட்டுள்ளார்.

குறித்த நபர் மீன் சந்தை ஒன்றின் மூலம் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளார். அவர் டெங்குத் தொற்றில் இருந்து ஓரளவு பாதுகாப்பான நிலையில் உள்ளார். தீவிரமாகத் தற்போது கண்காணிக்கப்படுகின்றார். (ம-இ)

# நீதி அமைச்சரோடும் பேசத்தான் வேண்டும்

## அரசியல் கைதிகள் விடுதலை குறித்து வியாழேந்திரன் கருத்து

மட்டக்களப்பு, நவ. 9



தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக நான் அன்று தொடக்கம் இன்றுவரை குரல் கொடுத்தவனாகவே இருந்து வருகின்றேன். அவர்களின் விடுதலைக்காக தொடர்ந்தும் குரல்கொடுப்பேன் என்று இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக ஜனாதிபதியிடம் பேசலாம், பிரதமரிடம் பேசலாம், நீதி அமைச்சரோடும் பேசவேண்டும். கைதிகளின் விடுதலை தொடர்பில் நீதி அமைச்சருக்கும் பங்கு இருக்கின்றது. அவர் இந்த நாட்டின் நீதித்துறைக்குப் பொறுப்பானவர்.

ஒவ்வொரு முறையும் அரசுக்கு வாக்களிக்கும் பொழுதும் அரசின் வரவு செலவுத் திட்டத்துக்கு வாக்களிக்கும் பொழுதும் பத்து அல்லது இருபது அரசியல் கைதிகளை விடுதலை செய்தால்தான் வாக்களிப்போம் என்ற நிபந்தனைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முன்வைத்திருந்தால் கடந்த நான்கரை வருடங்களில் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றிருக்கலாம்- என்றார். (த-இ)

# மன்னாரில் 11 பேரும் குணமடைந்து திரும்பினர்

மன்னார், நவ. 9

மன்னாரில் 12 கொரோனாத் தொற்றாளர்களில் 11 பேர் குணமடைந்துள்ளனர் என்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியிருந்த 12 பேரில் 11 பேர் முழுமையாகக் குணமடைந்துள்ளனர். கடந்த 27 திகதிக்கு முன்னர் 9 பேர் குணமடைந்திருந்தார்கள்.

தற்போது மேலும் இருவர் குணமடைந்து அவர்கள் வீடுகளுக்குத் திரும்பியுள்ள னர் என்று பணிப்பாளர் தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றுக்குள்ளான 12 பேரும் இரணவில மற்றும் கந்தகாடு சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வந்தவர்கள் என்று மேலும் தெரிவித்தார். ஒருவர் சிகிச்சைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளார். (த-213)

# வவு.வில் இரு வீதிகளின் சீரமைப்பு ஆரம்பம்

வவுனியா, நவ. 9

வவுனியா கற்பகபுரம் பிரதான வீதி மற்றும் வவுனியா பாலாமைக்கல் வீதி ஆகியனவற்றைக் காப்பெட் இட்டு சீரமைக்கும் பணியை கிராமிய வீதிகள் மற்றும் உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைத்தார்.

அதனடிப்படையில் 3 கிலோமீற்றர் நீளமான வவுனியா கற்பகபுரம் பிரதான வீதிக்கு ரூபா 79.9 மில்லியனும், 1.7 கிலோமீற்றர் நீளமான பாலாமைக்கல் வீதிக்கு ரூபா 46.79 மில்லியனும் ஒதுக்கிடப்பட்டுள்ளது.

ஒரு லட்சம் வீதிகள் சீரமைக்கும் ஜனாதிபதியின் செயற்றிட்டத்தின் கீழ் நடைபெற்ற இந்த நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் மற்றும் உபநகரபிதா வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அலுவலர்கள் மற்றும் கிராமமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (த)

# வீடுகளுக்கு மருந்து: திட்டம் மீள ஆரம்பம்



கொழும்பு, நவ.9

நாடளாவிய ரீதியில் நோயாளர்களுக்கான மருந்துகளை அவர்களது வீடுகளுக்கே சென்று விநியோகிக்க சுகாதார அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கைகள் நேற்றுத் தொடக்கம் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் மாத்திரம் இந்த திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தெய்வத்தான் ஆகா தெனினும் ...!

ஒருகாட்டில்நரியொன்று வேடன்வைத்தபொறியொன்றில் சிக்கிவிட்டது. நல்லவேளையாக அந்தப் பொறியில் அதன் வாலே மாட்டியிருந்தது. எனவே மிகுந்த பிரயத்தனத்தின் மத்தியில் அந்தப் பொறியில் இருந்து விடுபட்டது. ஆனால், அந்தோ பரிதாபம், அதன் வால் அப்படியே பொறியில் சிக்கி அறுந்துவிட்டது. இப்போது அது வாலில்லாத நரி. 'வாலில்லாமல் காட்டுக்குள் போனால் மற்றைய நரிகள் எல்லாமே கேலியாகப் பார்க்குமே. அதற்கு என்ன செய்யலாம்?' என்று அந்த நரி யோசனையில் இறங்கியது. கடைசியாக அது ஒரு வழியைக் கண்டுபிடித்தது.

தன்னுடைய நரிக்கூட்டத்தைச் சென்றடைந்த நரி, மகிழ்ச்சியாக இருப்பது போலத் துள்ளிக் குதித்தது.மற்றைய நரிகளுக்கு வாலில்லா நரி ஏன் இப்படி மகிழ்ச்சியாக இருக்கின்றது எனப் புரியவில்லை. கடைசியில் அவை "ஏன் இப்படி மகிழ்ச்சியில் ஆடுகிறாய்? உன் வாலுக்கு என்னாயிற்று?" என்று கேட்டன. அதற்கு அந்த நரி, "நான் கடவுளைக் கண்டுவிட்டேன். எனக்கு அவர் சாகா வரம் தந்துவிட்டார்" என்றது. மற்ற நரிகள் தாங்களும் கடவுளைப் பார்க்க வேண்டும் என வாலில்லா நரியிடம் கூறின.

"அப்படியா? ஆனால் தங்கள் வாலை அறுப்பவர்களுக்கு மட்டுமே கடவுள் காட்சி தருவார்" என்றது அந்த நரி. உடனேயே எல்லா நரிகளும் தங்கள் வால்களை அறுத்துக் கொண்டன, ஆனால் கடவுளைத்தான் அவற்றால் பார்க்க முடியவில்லை. இப்போது முதலில் வாலில்லாமல் போன நரியும் மற்றவையும் ஒன்றாகிவிட்டன.இப்படி ஒரு நரி வேலையைத்தான் இலங்கையின் பௌத்த அரசு செய்து கொண்டிருக்கிறது. கொரோனாவை ஒழிப்பதாகக் கூறி, மந்திரித்த தண்ணீர்ப் பானையை சுகாதார அமைச்சரே ஆற்றில் போட்ட சம்பவம் சந்தி சிரிக்குமளவுக்கு மாறிவிட்டது. இந்தச் சம்பவத்தின் பின்னர் பௌத்த மதத்தின் மூட நம்பிக்கைகளை எல்லோரும் ஒரு பிடி பிடித்துவருகின்றார்கள். குளிக்கப் போய் சேறு பூசியது போல,பானையைப் போடப் போய் பௌத்தத்துக்கு இழுக்கு ஏற்படுத்தி விட்டது அரசு.

அதனைச் சரி செய்யவே , வாலில்லா நரியின் யுக்தியை அரசு கையில் எடுத்து 'கொரோனாவை ஒழிக்க எல்லா மதத்தலங்களிலும் பிரார்த்தனை, வழிபாடுகள் செய்யுங்கள்' என்று அறைகூவல் விடுக்க, இப்போது கோயில்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்களில் எல்லாம் கொரோனா ஒழிப்பு வழிபாடுகள் களைகட்டியுள்ளன. இதன் மூலம்,பௌத்த மதத்தினர் மட்டுமல்ல மற்றைய மதத்தவர்களும் கொரோனாவை ஒழிக்க கடவுளைத்தான் நம்புகிறார்கள் என்ற கருத்தியலை உருவாக்க அரசு நினைக்கிறது. அதாவது நாங்கள் மட்டும் மூட நம்பிக்கையைப் பின்பற்றவில்லை, மற்றவர்களும் அதே வழிதான் என்று நம்பவைக்கவே இப்படியான அறிவிப்பு.

இப்படி பிரார்த்தனை மூலமோ, மணியோசை எழுப்பியோ கொரோனாவை ஒழிக்க முடியாது என்று சகலருக்குமே தெரியும். தனியாள் இடைவெளியும், தனித்திருத்தலும், முகக் கவசமணிதலும், கைகளைக் கிருமி நீக்கம் செய்தலுமே கொரோனாவில் இருந்து தற்காத்துக் கொள்ளும் வழிகள். இவ்வாறான பிரார்த்தனைக்கும், கூடி வழிபடுதலுக்கும் தூண்டுவது இன்னும் கொரோனா பரவுதவதற்கான வழியைத் திறந்துவைப்பதாகவே இருக்கும். மனிதர்களின் மனங்களைப் பண்படுத்த வேண்டுமானால் மதங்கள் உதவலாம். ஆனால் கொரோனா போன்ற பெருந்தொற்றுக்களைத் தீர்க்க பிரார்த்தனைகள் உதவப்போவதில்லை. கடவுளர்களால் முடியாமல் போன விடயங்களை மனித நடவடிக்கைகள் மூலம் வெற்றி கொள்ளலாம்.

"தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்

மெய்வருத்தக் கூலி தரும்"


என்பதை மனதில் இருத்தி, அப்படியான விடயங்களில் ஒன்றே கொரோனாவும் என்பதை உணர்ந்து அரசு சொல்லிவிட்டது என்பதற்காக ,கேலிக்குள்ளாக்கும் காரியங்களில் கண்மூடிக் கொண்டு இறங்காமல் இருப்பதே அவரவர் மதங்களுக்கும், கடவுளர்க்கும் கொடுக்கும் மரியாதையாக இருக்க முடியும்.

# அறிகுறி அற்றோரிடமிருந்து கொவிட் தொற்று ஏற்படாது

## பேராசிரியர் நீலிகா தெரிவிப்பு

கொழும்பு, நவ. 9

**கொரோனா அறிகுறியை வெளிப்படுத்தாத மற்றும் சிறு நோய் அறிகுறிகளை வெளிப்படுத்தும் நபர்களிடமிருந்து ஏழு நாள்களின் பின்னர், மற்றுமொருவருக்கு வைரஸ் தொற்று ஏற்படாது என்று சிறிஜயவர்தனபுர பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் நோய் எதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவத்துறை பிரிவின் பிரதானி, பேராசிரியர் நீலிகா மலவிகே தெரிவித்துள்ளார்.**



கொரோனா நோயாளர் ஒருவருக்கு, நோய் அறிகுறிகள் தென்படாவிட்டால், அவரைத் தனிமைப்படுத்தல் மையத்துக்கு அனுப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கடுமையான நோய் அறிகுறிகள் வெளிப்படுத்துபவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்படுகின்றனர்.

நோய் அறிகுறியை வெளிப்படுத்தாத மற்றும் சிறு நோய் அறிகுறிகளை வெளிப்படுத்தும் நபர்களிடமிருந்து ஏழு நாள்களின் பின்னர், மற்றுமொருவருக்கு வைரஸ் தொற்று ஏற்படாதமையால் ஏனைய நாடுகளில் மருத்துவமனைகளிலிருந்து வெளியேற்றப்படுகின்றனர், - என்றார். (ஒ,இ)

## மூன்றாம் மட்ட எச்சரிக்கை

கொழும்பு, நவ. 9



கொரோனா வைரஸ் தொற்றில் இலங்கை தற்போது மூன்றாவது எச்சரிக்கை மட்டத்தில் உள்ளது என சுகாதார அமைச்சின் பொதுச் சுகாதார சேவைகளுக்குப் பொறுப்பான பிரதிப் பணிப்பாளர் சுசீ பெரேரா தெரிவித்தார்.

சில இடங்களில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு நடைமுறையில் இருந்தாலும் ஏனைய பகுதிகளில் சில கட்டுப்பாடுகளுடன் மக்கள் வாழ்க்கையையும் தொழில்களையும் முன்னெடுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் தற்போதைய தொற்றுப் பரம்பல் நாளுக்கு நாள் மாறி வருவதால், மக்களின் வாழ்க்கை முறையைப் பேணும் வழிமுறைகள் கருதி சுகாதார அமைச்சு மூன்றாவது எச்சரிக்கை மட்டத்தை பிரகடனம் செய்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். (ஒ,இ)

## 20ஐ ஆதரித்த எதிரணியினர் தொடர்ந்தும் அரசுக்கு ஆதரவு

கொழும்பு, நவ. 9

அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்த ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த 9 நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து தொடர்ந்து அரசுக்கு ஆதரவளிக்க முடிவு செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான டயானா கமகே, அ. அரவிந்த்குமார், இஷாக் ரஹ்மான், பைசல் காசிம், எச்.எம். ஹாரிஸ், எம்.எஸ். தவ்ஃபிக், நசீர் அகமது, ஏ.ஏ.எஸ். எம். ரஹீம் மற்றும் எஸ்.எம். முஷாரஃப் ஆகியோரே மேற்கண்டவாறு செயற்படவுள்ளனர்.

இவர்களுக்கு ஆளும் கட்சியில் இடங்களை வழங்குமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை எதிர்க்கட்சிக் கொறடா லக்ஸ்மன் கிரியெல்ல எழுத்துபூர்வமாக கோரியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதுவரை எந்த பதிலும் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (த-இ)

# கிளிநொச்சி மாவட்ட மக்களின் கடன் மீளளிப்பை நீக்கத் திட்டம்

கிளிநொச்சி, நவ.9

கிளிநொச்சி மாவட்டத்தில் மின்சார இணைப்புக்கும், வீடமைப்புக்குமெனக் கடன்பெற்ற மக்களின் கடன் மீளளிப்பை இரத்துச் செய்வதற்கு துறைசார் அமைச்சர்கள் முடிவு செய்துள்ளனர்.

யாழ் மாவட்டச் செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

போரினால் பாதிக்கப்பட்டு, பொருளாதார ரீதியாக நலிவடைந்த நிலையிலுள்ள கிளிநொச்சி மாவட்ட மக்களின் நிலைமையை விசேடமாகக் கவனத்தில் கொண்டு, அவர்களுக்கு வழங்கப்பட்ட மின்னிணைப்பு மற்றும் வீடமைப்புக் கடன் மீளளிப்பிலிருந்து அவர்களை விடுவிக்குமாறு அமைச்சர்களுக்கு விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்தே அந்தக் கூட்டத்தில் இவ்வாறு முடிவு செய்யப்பட்டுள்ளது. (ப)

வடமாகாண மரநடுகை மாதம்

கார்த்திகை 2020

"எவரொருவர் ஒரு மரத்தை நாட்டுகின்றாரோ, அவர் நம்பிக்கையை நாட்டுபவர் ஆவார்." - *லியுசி லார்கோம்*

# அன்டிஜென் சோதனையை ஆரம்பிக்க பரிசோதனைகள்

கொழும்பு, நவ. 9



பி.சி.ஆர். சோதனைக்கு மாற்றாக இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்படவுள்ள அன்டிஜென் அடிப்படையிலான விரைவான நோயறிதல் பரிசோதனையின் தரத்தை மருத்துவ நிபுணர்கள் குழு ஆய்வுசெய்து வருகிறது.

வைரஸ் உள்ள எந்தத் தரப்பினரை அன்டிஜென் சோதனைகளுக்கு உட்படுத்த வேண்டும் என்பதை அறிய நிபுணர் குழு ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றது என சுகாதார அமைச்சின் தொற்று நோய் பிரிவின் விசேட மருத்துவ நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

அன்டிஜென் சோதனை முன்னெடுக்கப்பட்டாலும் பி.சி.ஆர். சோதனையும் தற்போது முன்னெடுக்கப்படுகின்ற அளவில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

புதிய சோதனை முறையை அறிமுகப்படுத்துவதன் மூலம், பி.சி.ஆர். சோதனையை விட குறுகிய காலத்துக்குள் முடிவுகளை பெற்றுக்கொள்ள முடியும் என அவர் சுட்டிக்காட்டினார்.

பி.சி.ஆர் சோதனைக்கு பயன்படுத்தப்பட்டதைப் போல பெரிய இயந்திரங்கள் எதுவும் தேவையில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ.இ)

# புதிய அமெரிக்க ஜனாதிபதிக்கு மலையகத்திலிருந்தும் வாழ்த்து

நுவரெலியா, நவ.9

அமெரிக்காவின் 46 ஆவது ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள ஜோ பைடன் மற்றும் துணை ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள கமலா ஹாரிஷ் ஆகியோருக்கு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணி வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளன.

கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், தனது ருவிட்டர் பக்கத்திலும், இ.தொ.காவின் உபதலைவரும், பெருந்தோட்டங்களுக்கான இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமான் தனது முகப் புத்தகப் பக்த்திலும் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

மதசார்பற்ற, சிறுபான்மையினத்தவர்களையும் அரவணைத்துப் பயணிக்கக் கூடிய ஜோ பைடன் அமெரிக்காவின் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டுள்ளமையானது, எதிர்காலத்தில் ஏனைய நாடுகளிலும் மாற்றத்துக்கு வழிவகுக்கும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவர் வே. இராதாகிருஷ்ணனும் தெரிவித்துள்ளார். (ப-இ)

# மஞ்சள் செய்கையிலும் இறங்கியது இராணுவம்

*முதல் செய்கை அம்பலாங்கொடையில் ஆரம்பம்*

கொழும்பு, நவ.9



கோப்புப்படம்

அம்பலாங்கொடையில் உள்ள இராணுவத்தினரின் காணியில் இராணுவத்தினர் மஞ்சள் பயிர்ச்செய்கையில் ஈடுபடவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியின் 'சுபீட்சத்தின் நோக்கு' வேலைத்திட்டத்துக்கு அமைவாகவும் இராணுவ தளபதியின் 'துரு மிதுரு நவரட்டக்' திட்டத்திற்கு அமைவாகவும் இந்தப் பயிர்ச்செய்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஏற்றுமதி இராஜாங்க அமைச்சுடன் இணைந்து முன்னெடுக்கப்படும் இத் திட்டத்தில் சுமார் 100,000 மஞ்சள் கன்றுகள் அம்பலாங்கொடையில் உள்ள இராணுவப் பயிர்ச் செய்கை காணிகளில் பயிரிடப்படவுள்ளன. இந்த மஞ்சள் கன்றுகள் சுமார் 4 மில்லியன் மதிப்புடையவையாகும் என இராணுவம் தெரிவித்துள்ளது.

திட்டத்தை தோட்டத் தொழில்துறை மற்றும் ஏற்றுமதி விவசாய அமைச்சர் ரமேஷ் பத்திரண, மற்றும் விவசாய இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர, இராணுவத்தின் விவசாயம் மற்றும் கால்நடைத் திணைக்களத்தின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் இந்திரஜித் கந்தனாராச்சி ஆகியோர் இணைந்து ஆரம்பித்து வைத்துள்ளனர்.

இந்தத் திட்டத்தின் இரண்டாம் கட்டம் பலல்ல இராணுவப் பயிர்செய்கை காணியிலும் மூன்றாம் கட்டம் ரம்புகன் ஓயா இராணுவ பயிர்செய்கைக் காணியிலும் முன்னெடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ப-இ)

# பொலிஸாருக்கு கொரோனா: விசாரணைகள் தாமதம்

கொழும்பு, நவ. 9



கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவின் சுமார் 40 அதிகாரிகள், கொரோனாத்தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளதன் காரணமாகவே, பிரண்டிக்ஸ் ஆடைத்தொழிற்சாலை கொரோனாத் தொற்று தொடர்பான விசாரணைகள் தாமதமாகியுள்ளன. இந்த தகவலை பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண வெளியிட்டுள்ளார்.

தாம் பணிப்புரை விடுத்தும் பிரண்டிக்ஸ் ஆடைத்தொழிற்சாலை கொரோனாத் தொற்று தொடர்பான விசாரணைகள் இன்னும் ஆரம்பிக்கப்படாமை தொடர்பில் அண்மையில் சட்டமா அதிபர், பதில்பொலிஸ்மா அதிபரிடம் கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்த நிலையிலேயே தாமதத்துக்கான காரணத்தை அஜித் ரோஹண வெளியிட்டுள்ளார். (ஒ.இ)

# நாயின் வேலைகளை கழுதை செய்யக்கூடாது

## இராணுவத்தை சாடுகின்றது தொழில்நுட்பவியலாளர் சங்கம்

கொரோனா வைரஸ் தொற்றுநோயைக் கண்டறியும் பி.சி.ஆர். பரிசோதனைகளை தொழில் நிபுணர்களுக்குப் பதிலாக இராணுவத்தினர் மேற்கொள்கின்றமையைக் கண்டித்துள்ள சுகாதாரத் துறையினர், இந்தச் செயற்பாடு யானைக்கால் நோய்க்கு மருந்து கட்டுவதைப்போல் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளனர்.

பரிசோதனைகளை மேற்கொள்ளப் போதுமான அளவு பயிற்சிபெற்ற வல்லுநர்கள் காணப்படும் நிலையில், பணியை இராணுவத்திடம் ஒப்படைப்பதன் ஊடாக, பிரச்சினை மேலும் சிக்கலானதாக மாறக்கூடாது என்று இலங்கை அரச மருத்துவ ஆய்வக தொழில்நுட்பவியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

“யானைக்கால் நோய்க்கு மருந்து கட்டுவது அல்லது நாயின் வேலையை கழுதை செய்வதைப் போல, இந்தப் பணியை மிகவும் சிக்கலாக்க வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால், பி.சி.ஆர். பரிசோதனையில் ஈடுபடுவோர் குறித்து எந்தக் கேள்வியும் இல்லை.” என்று அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை அரச மருத்துவ ஆய்வக தொழில்நுட்பவியலாளர்களால் மாத்திரமே பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அந்த நிபுணர்களுக்கு மாத்திரமே மருத்துவ சபையில் சட்டபூர்வ அனுமதி காணப்படுகின்றது என்றும் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார். (த-இ)

# ஆணைக்குழுவைச் சீண்டிய எம்.பிக்களுக்கு சிக்கல்!

கொழும்பு, நவ. 9

அரசியல் பழிவாங்கல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு தொடர்பில் அவதூறான கருத்துக்களை வெளிப்படுத்திய, சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் 4 நாடாளுமன்ற உறுப்பினர்கள் விசாரணைகளை எதிர்நோக்கியுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹரின் பெர்னாண்டோ, நளின் பண்டார, ஜே.சி.அலவதுவால மற்றும் மயந்த திசாநாயக்க ஆகியோரிடம் வாக்குமூலம் பெறுவதற்கு ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவில் முன்னிலையாகுமாறு அறிவித்தலும் அனுப்பப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் பதவிக் காலத்தை நீடிக்குமாறு ஆணைக்குழுவின் தலைவர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என தகவல்கள் வெளிவந்துள்ளன. (ஒ.இ)



# முகக்கவசங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், நவ.9

யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேச சுகாதார பிரிவு தொண்டர்களுக்கு யாழ் சிற்றி லயன்ஸ் கழகத்தால் ஒரு தொகுதி முகக்கவசங்கள் மற்றும் தொற்று நீக்கிகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு நல்லூர் சுகாதார பணிமனையில் பிரதேச சுகாதார பரிசோதகரின் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் கடமை புரியும் சுகாதார தொண்டர்களுக்கே இவ் முகக்கவசங்கள், தொற்று நீக்கிகள் வழங்கப்பட்டன. (ஜ-இ)

# முகக்கவசம் அணியாதவர் தனிமைப்படுத்தல்

கொழும்பு, நவ. 9

முகக்கவசம் அணியாமல் தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்துக்குள் நுழைந்தார் என்ற குற்றச்சாட்டில் வர்த்தகர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரை 14 நாள்கள் தனிமைப்படுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

அவர் தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்துக்கு அருகில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரியின் ஆலோசனைகளை மீறி முகக்கவசம் அணியாமல் பொருளாதார மத்திய நிலையத்துக்குள் நுழைய முயற்சித்துள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. (த-இ)

# நீதிபதிகள் நியமன விடயத்தில் பரிந்துரைகளை ஏற்காத கோத்தா!

## பிரதமர் மஹிந்தவிடம் முறைப்பாடு

கொழும்பு, நவ. 9

**ஜனாதிபதி பரிந்துரைத்த உயர்நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களின் வெற்றிடங்களுக்கான பெயர்களில் தமது திணைக்களத்தில் பணியாற்றும் பலர் இடம்பெறவில்லை என்று, சட்டமா அதிபர் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.**

20ஆவது திருத்தச் சட்டத்தின்கீழ் உயர்நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களுக்கான நியமனங்களை ஜனாதிபதி மேற்கொள்ளமுடியும். அதன் அடிப்படையில் அவர் நாடாளுமன்ற பேரவைக்கு நீதிபதிகள் சிலரின் பெயர்களைப் பரிந்துரைத்துள்ளார்.

எனினும், இவர்களைக் காட்டிலும் அனுபவம் வாய்ந்த பலர் தமது திணைக்களத்தில் உள்ளனர் என்று சட்டமா அதிபர் டப்புல டி லிவேரே பிரதமரிடம் தெரிவித்துள்ளார். ஆனால், இதனைப்பற்றி தான் அறிந்திருக்கவில்லை என்று குறிப்பிட்ட பிரதமர் இது தொடர்பில் ஆராய்கின்றேன் என்று கூறியுள்ளார்;.

தற்போதுள்ள நிலையில் உயர்நீதிமன்ற நீதியரசர்களின் தொகை 17ஆக உயர்ந்தப்படவுள்ளது. இதற்காக ஜனாதிபதி மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான ஏ.எம்.டி. நவாஸ், குமுதின விக்கிரமசிங்க, ஷிரான் குணரட்ன, அச்சேல வெங்கப்புலி, மஹிந்த சமயாநந்த மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோரின் பெயர்களைப் பரிந்துரைத்துள்ளார்.

எனினும், இந்தப் பதவிகளுக்காக சட்டமா அதிபர் மேலதிக மன்றாடியார் நாயகங்களான சரத் ஜெயமான்னே, இந்திக தேவமுனி, பர்ஸானா ஜமீல் மற்றும் பிரியந்த நயன ஆகியோரை பரிந்துரைத்துள்ளார். அத்துடன் தமது திணைக்களத்தின் சிலரையும் இந்தப் பதவிகளுக்காக நியமிக்க சட்டமா அதிபர் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

இதற்கிடையில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையில் ஜனாதி பதி சிலரை பரிந்துரைத்துள்ளார்.

இதற்காக மேல்நீதிமன்ற நீதிபதிகளான மேனகா விஜயசுந்தர, டி.என். சமரகோன், எம்.பிரசன்ன, எம்.ஜே. எம்.லாபீர், சி.பி. கீர்த்திசேன, சம்பம் அபேகோன், சம்பத் விஜேரதட்ன, விக்கும் களுஆராச்சி, உதய கரலியத்த, எம்.ஏ.ஆர். மரிக்கார், ஆர்.குருசிங்க, ரி.சசி மஹேந்திரன், சம்பா ஜானகி ராஜரட்ன, கிஹான் குலதுங்க மற்றும் தம்மிக்க கனேபொல ஆகியோரின் பெயர்களை ஜனாதிபதி நாடாளுமன்ற பேரவையிடம் பரிந்துரைத்துள்ளார்

இதேவேளை, இந்தப் பதவிகளுக்காக தமது திணைக்களத்தின் சிரேஷ்ட உறுப்பினர்களான சிரேஷ்ட மன்றாடியாளர் நாயகங்களான விவேக சிறிவர்த்தன, அனூஸா பெர்ணான்டோ சமரநாயக்க, பிரதி மன்றாடியார் நாயகங்களான விக்கும் டி ஆப்ரு, மாயாதுன்னே கொரையா, மற்றும் குமரன் ரட்ணம் ஆகியோரை சட்டமா அதிபர் பரிந்துரைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-இ)

# ஈழத் தமிழர் மூவர் பங்களாதேஷில் கைது

கொழும்பு, நவ. 9

பங்களாதேஷில் பதுங்கியிருந்த இலங்கைத் தமிழர்கள் மூவர் அந்த நாட்டு எல்லைப் பாதுகாப்பு படையினரால் கடந்த புதன்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டமூவரும் சீருப் நகர் பொலிஸ் நிலைய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாராலி வடக்கு பகுதியில் எல்லைப் பாதுகாப்பு படையினர் ரோந்து சென்றபோது குறித்த மூவரும் பதுங்கியிருந்த நிலையில் கைதுசெய்யப்பட்டனர். எம்.திருமாறன் (40), எஸ் .பிங்கலன் (36) மற்றும் மணிகண்டன் (25) ஆகியோரே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

அவர்களிடமிருந்து சுமார் 2 லட்சத்து 43 ஆயிரத்து 819 ரூபா வெளிநாட்டு நாணயமும் கைப்பற்றப்பட்டுள்ளது. இவர்கள் 10 மாதங்களுக்கு முன்பு இந்தியாவிலிருந்து பங்களாதேஷுக்குள் நுழைந்துள்ளனர் என்று எல்லைப் பாதுகாப்புப் படையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மூவரும் தாங்கள் முதலில் இலங்கை நாட்டவர்கள் என்றும் 1990 இல் இடம்பெயர்ந்து தமிழகத்தில் வாழத் தொடங்கினர் என்றும் கூறினர். அவர்கள் வெளிநாட்டுக்குச் செல்வதற்காக ஸ்டாலின் கிறிஸ்தோபர் என்ற முகவரை அணுகினர். இந்திய பாஸ்போர்ட்களைப் பெறுவது கடினம் என்று முகவர் அவர்களிடம் கூறினார்.

ஆனால் அவர்கள் அந்த நாட்டுக்குப் பயணம் செய்தால் அங்கு பாஸ்போட்டை எடுக்கலாம் எனத் தெரிவித்துள்ளார். பின்னர் மூவரும் பங்களாதேஷுக்கு சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-இ)

# கோவா செய்கையில் வைரஸின் தாக்கம்

## அச்சத்தில் விவசாயிகள்

புத்தளம், நவ.9

புத்தளம், கல்பிட்டி பிரதேசத்தில் கோவா செய்கை யில் பரவிவரும் ஒருவகை வைரஸ் தாக்கம் காரணமாக அப் பிரதேச விவசாயிகளிடையே பெரும் அச்ச நிலை ஏற்பட்டுள்ளது.

சுமார் 500 ஏக்கர் நிலப்பரப்பில் காணப்படுகிற கோவா செய்கையில் இவ்வாறு வைரஸ் தாக்கம் ஏற்பட்டுள்ளது. தளுவ, நுரைச்சோலை, மாம்புரிய, நாரக்கள்ளிய, இலந்தடி, சேனப்பொல ஆகிய பிரதேசங்களில் இவ்வாறு வைரஸ் தாக்கம் காணப்படுகிறது. இந்த வைரஸ் தாக்கம் ஏனைய விவசாய உற்பத்திகளிலும் பரவக்கூடும் என்ற அச்சம் தற்போது விவசாயிகளிடைய ஏற்பட்டுள்ளது. (ப-இ)

# இலவச மருத்துவ ஆலோசனை

ஆனைக்கோட்டை, நவ.9

ஆனைக்கோட்டை கூழாவடியில் அமைந்துள்ள அபயம் மருத்துவ சேவை நிலையத்தில், பெண் நோயியல் சிறப்புச் சிகிச்சை நிபுணரும் மருத்துவ கலாநிதியுமான என். சரவணபவ இலவசமாக மருத்துவ ஆலோசனையை வழங்கவுள்ளார்.

ஆலோசனையைப் பெற விரும்புவோர் அபயம் மருத்துவ சேவை நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். பதிவுகள் திங்கள், புதன், வெள்ளி, சனி ஆகிய நாள்களில் பிற்பகல் 2 மணி தொடக்கம் 5 மணி வரை இடம்பெறவுள்ளன. (ப)

# நிபுணர் குழு ஆராய்ந்துதான் ஜனாஸா விடயத்துக்கு முடிவு

கொழும்பு, நவ. 9

முஸ்லிம்களின் சடலத்தை அடக்கம் செய்யும் விவகாரம் தொடர்பில் விசேட மருத்துவ நிபுணர்களுடன் பல சுற்று கலந்துரையாடல்களை நடத்தியுள்ளோம். இது தொடர்பில் நன்கு மதிப்பீடு செய்துதான் தீர்மானங்களை எடுக்க வேண்டும். சுகாதார அமைச்சின் விசேட மருத்துவ நிபுணர்களின் சிபார்சுக்கு அமையவே இறக்கும் அனைவரின் சடலங்களையும் தகனம் செய்ய முடிவு எடுக்கப்பட்டது என்று சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

அமைச்சர் அலி சப்ரியின் கோரிக்கைக்கமைய இந்தக்குழு இந்த வாரம் கூடி மீள் பரிசீலனை செய்யும் என்றும் அவர் கூறியிருந்தார்.

கொரோனாவால் உயிரிழந்த 30 பேரில் 15 பேர் முஸ்லிம்களென அறிய வருகிறது. இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த நீதி அமைச்சர் அலி சப்ரி,

முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரிப்பதை தவிர்ப்பது பற்றி ஜனாதிபதியுடன் தனிப்பட்ட முறையில் உரையாடியுள்ளேன்.

கொரோனாவால் உயிரிழப்பவர்களின் சடலங்களைப் புதைப்பதால், பாதிப்பில்லை என்ற பொது நிலைப்பாட்டுக்கு வந்து, அதன் பின்னர் கொரோனா தகனம் செய்ய மாத்திரம் அனுமதிக்க முடிவு செய்யப்பட்டது. இது பற்றி ஆராயப்படுகின்றது -என்றார். (த-இ)




# 'கற்பகா' திட்டத்தின் 3ஆம் கட்டம் முல்லையில்

தாயக நிலங்களில் ஒரு மில்லியன் பயன்தரும் மரக்கன்றுகளின் விதைகளை நடுகை செய்யும், கற்பகா திட்டத்தின் மூன்றாம் கட்ட நிகழ்வு நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு, வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயச் சூழலில் இடம்பெற்றது.

கிளி மக்கள் அமைப்பும், கிளிநொச்சி சமூக அபிவிருத்திப் பேரவையும் இணைந்து சுமார் ஒரு மில்லியன் பயன்தரும் மரக்கன்றுகளின் விதைகளை நடும் திட்டத்தை முன்னெடுத்துள்ளனர். அதனுடைய மூன்றாம் கட்ட நிகழ்வே நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. கரைத்துறைபற்று இளைஞர் சம்மேளனம் மற்றும் முல்லைத்தீவு செஞ்சிலுவைச் சங்கம் இணைந்து அந்த நிகழ்வை ஒழுங்குசெய்திருந்தன.

இந்த நிகழ்வில், முல்லை மாவட்டச் செயலர் க விமலேஸ்வரன், யாழ்.போதனா மருத்துவமனைப் பணிப்பாளரும் கிளி சமூக அபிவிருத்திப் பேரவை செயற்பாட்டாளருமான மருத்துவர் சத்தியமூர்த்தி, மேலதிக மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன், மாவட்ட சுகாதார அதிகாரி மருத்துவர் ஸ்ரீராமன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ப-222)

# 235 பொலிஸாருக்கு கொவிட்-19 தொற்று



கொழும்பு, நவ. 9

மேல் மாகாணத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் மொத்தம் 235 பொலிஸ் அதிகாரிகள் இதுவரை கொரோ னாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளது.

அவர்களில் 6 பேர் குணமடைந்த நிலையில் மருத்துவமனைகளை விட்டு வெளியேறியுள்ளனர். அதன்படி தற்போது சிகிச்சை பெறும் பொலிஸ் அதிகாரிகளின் எண்ணிக்கை 229 ஆகவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தவிர தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு குறைந்தது 300 பொலிஸார் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். அதே வேளை சுய தனிமைப்படுத்தலில் 1,425 பொலிஸார் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ப)

யாழ்ப்பாணம், மன்னாரிலுள்ள

# இந்திய மீனவரின் 121 றோலர்களையும் அழிக்க, ஏலமிட நீதிமன்றம் அனுமதி

கொழும்பு, நவ. 9

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 121 இந்திய மீன்பிடி றோலர் படகுகளையும் அழிப்பதற்கு நீதிமன்றங்கள் அனுமதி வழங்கியுள்ளன.

யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் கடற்றொழில் திணைக்களம் இது பற்றி தாக்கல்செய்த வழக்குகளை ஆராய்ந்த நீதிமன்று அவற்றை அழிக்க அனுமதி வழங்கியது.

இலங்கை கடற்பரப்புக்குள் மன்னார் மாவட்ட எல்லை மற்றும் ஊர்காவற்றுறை எல்லைப் பரப்புக்குள் ஊடுருவிய சமயம் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டு மாவட்ட நீரியல்வளத் திணைக்களம் ஊடாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. அவ்வாறு யாழ்ப்பாணத்தில் 94 படகுகளும் மன்னார் மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட 27 படகுகளுமே இவ்வாறு அழிப்பதற்கு அல்லது ஏலத்தில் விடுவதற்கான அனுமதியை இரு நீதிமன்றங்களும் வழங்கியுள்ளன.

இலங்கை கடற்பரப்புக்குள் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2018ஆம் ஆண்டு வரையில் ஊடுருவிய 37 படகுகள் மன்னார் நீதிமன்ற உத்தரவின் பெயரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இவற்றை விடுவிக்க 2018ஆம் ஆண்டு நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

இந்த அனுமதிக்கு அமைய இந்தியாவிலிருந்து வருகை தந்த மீனவ அமைப்புக்கள் 10 படகுகளை மட்டுமே எடுத்துச் சென்றன. எஞ்சியவை அதிக பழுது எனத் தெரிவித்து கைவிட்டுச் சென்றிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-இ)

## பரபரப்பை ஏற்படுத்திய சந்திரிகாவின் வாழ்த்து

*வாழ்த்துச் செய்தியில் இலங்கையைச் சாடினாரா?*



கொழும்பு, நவ.9

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி மற்றும் துணை ஜனாதிபதி ஆகியோருக்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, கூறிய வாழ்த்து பரபரப்பாகப் பேசப்படுகிறது.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக ஜோ பைடன் மக்களால் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இந்த நிலையில் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அவருக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார். அந்த வாழ்த்துச் செய்தியில் "மன்னர்களுக்குப் பைத்தியம் பிடித்தால் மக்களுக்கான ஒரே பாதுகாப்பு ஜனநாயகம் மட்டுமே என்பதை அமெரிக்கர்கள் நிரூபித்து விட்டார்கள்" என்று தெரிவித்துள்ளார். இது அவர் மறைமுகமாக இலங்கையைச் சாடியுள்ளார் என்று பேசப்படுகிறது. (ப-இ)

## கசிப்பு உற்பத்தி; ஒருவர் கைது

கொடிகாமம். நவ. 9

தென்மராட்சி கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எருவன் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய நேற்றுமுன்தினம் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் அவரைக் கைதுசெய்தனர். மேலதிக விசாரணைகளின் பின் அவர் நீதி மன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ப-159)

# பட்ஜெட் விவாத நாள்களை சுருக்கியமைக்கு எதிர்ப்பு

கொழும்பு, நவ. 9



அடுத்த ஆண்டுக்கான பட்ஜெட் விவாத நாள்கள் குறைக்கப்பட்டால் அதற்கு கடும் எதிர்ப்பை ஐக்கிய மக்கள் சக்தி வெளியிடும் என்று அந்தக் கட்சியின் அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

பட்ஜெட் தொடர்பில் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட வேண்டியுள்ளன. சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நாடாளுமன்ற அமர்வு நாள்களை அதிகமாக நடத்த முடியும், என்றார்.

2021 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் தொடர்பான விவாதம் குறித்து தீர்மானிப்பதற்கான கட்சித் தலைவர்களின் கூட்டம் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் அடுத்த வாரம் இடம்பெறவுள்ளது. (ஒ.இ)

## பி.சி.ஆர். இயந்திரத்தை இலவசமாக வழங்கும் சீனா

கொழும்பு, நவ. 9

முல்லேரியா மருத்துவமனைக்கு சீன நிறுவனம் பி.சி.ஆர். இயந்திரத்தை இலவசமாக வழங்கவுள்ளது. மருத்துவமனையில் உள்ள பி.சி.ஆர். இயந்திரமானது பல நாள்களாக செயலற்று இருந்த நிலையில் அதனைச் சீன தொழில் நுட்பக்குழு சீர்செய்திருந்தது. இந்த நிலையில் முல்லேரியா மருத்துவமனைக்கு புதிய பி.சி.ஆர். இயந்திரத்தையும் வழங்குவதற்கு சீன நிறுவனம் ஒன்று நடவடிக்கை எடுத்துள்ளது. (ஒ.இ)

## தமிழ் அரசு இளைஞர் அணியின் மர நடுகை திட்டம் ஆரம்பம்

கிளிநொச்சி, நவ.9

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட இளைஞர் அணியினால் 100,000 பனம் விதைகள் நடும் செயற்றிட்டம் நேற்று முன்தினம் செருக்கன் பகுதியில் ஆரம்பமானது.

அந்தத் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக மாவட்டத்தின் பரந்தன் செருக்கன் பகுதியில் பூநகரி வீதியின் இரு மருங்கிலும் பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டன.

நிகழ்வில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் செயலாளர் சு.சுரேன், கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உப தவிசாளர் மு.கஜன் ரமேஷ், பூநகரி அமைப்பாளர் குகேந்திரன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட வாலிபர் முன்னணியினர் கலந்துகொண்டனர். (ப-6)

# பெரும் சேதமடைந்துள்ள குடாநாட்டின் பிரதான வீதி

*சீரமைக்கப்படாதது மக்களின் சாபக்கேடா?*

யாழ்ப்பாணம், நவ.9



யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள பிரதான வீதிகளில் ஒன்றான யாழ். மானிப்பாய் - காரைநகர் பிரதான வீதி பெரும் சேதங்களைக் கொண்டுள்ளதால் அந்த வீதியூடாகப் பயணிப்பதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இது தொடர்பில் மக்கள் மேலும் தெரிவித்ததாவது;

குறித்த வீதியின் சீரமைப்புப் பற்றி பல கருத்துக்கள் ஊடகங்கள் வாயிலாகவும், அரசியல்வாதிகளாலும் தெரிவிக்கப்பட்டபோதும் இதுவரை அந்த வீதியின் சீரமைப்புக்கான எந்த உந்துதல்களும் முன்னெடுக்கப்படவில்லை. இதனால் வீதியூடான போக்குவரத்தில் ஈடுபடும் மக்களாகிய நாங்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம். குடாநாட்டின் பிரதான வீதிகள் அனைத்தும் காப்பெற் வீதிகளாகச் சீரமைக்கப்பட்டு மக்களுடைய போக்குவரத்து இலகுபடுத்தப்பட்டுள்ள நிலையில், எமது பிரதேச மக்களுக்கு மட்டும் இந்த வீதி சாபக்கேடானதா? வீதியைச் சீரமைக்குமாறு வீதியைப் பன்படுத்தும், மக்களாகிய நாம் பல கோரிக்கைகளை முன்வைத்துள்ளோம். எமது பிரச்சினைகளைத் தெரியப்படுத்தியுள்ளோம். ஒவ்வொரு மழையிலும் இந்த வீதியால் பயணிக்கும்போது பிரச்சினைகளை நாம் எதிர்கொள்கிறோம். முதியவர்கள், கர்ப்பிணிப் பெண்கள் நோய்வாய்ப்பட்டவர்கள் வீதியூடாப் பயணிக்க முடியாது பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். எமது சாபக்கேடாக உள்ள இந்த வீதியை உரிய தரப்பினர்கூடி கவனமெடுத்து விரைந்து வீதியைச் சீரமைத்துத் தருமாறு கேட்டுக் கொள்கிறோம் - என்றனர். (ப)

## கொரோனா மருத்துவமனையாக மட்டு. ஷரிஅ பல்கலைக்கழகம்

கொழும்பு, நவ. 9

கடந்த காலங்களில் மிகவும் சர்ச்சைக்குரிய விடயமாகக் காணப்பட்ட மட்டக்களப்பு ஷரிஅ பல்கலைக்கழகம் தற்போது கொவிட் விசேட சிகிச்சை மத்திய நிலையமாக மாற்றப்பட்டுள்ளது.

நாட்டில் அதிகளவான கொரோனாத் தொற்றாளர்கள் குறித்த மத்திய நிலையத்திலேயே சிகிச்சைபெற்று வருகின்றனர்.

பெரும் நிலப்பரப்பைக் கொண்ட குறித்த கொவிட் சிகிச்சை மத்திய நிலையம் நோயாளர்களின் சிகிச்சைக்கு சேவைகளை வழங்கும் வகையில் இராணுவத்தினரின் பங்களிப்போடு மாற்றியமைக்கப்பட்டுள்ளது. கொரோனா நோயாளர்களுக்குத் தேவையான உணவு விநியோகம், தண்ணீர் விநியோகம், சுகாதார வசதி வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்கு இராணுவத்தினர் அர்ப்பணிப்புடன் செயற்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. ஒரே நேரத்தில் இரண்டாயிரத்து 200 நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கக்கூடிய வகையில் குறித்த சிகிச்சை மத்திய நிலையம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. (த-இ)

# கொரோனாவிலிருந்து பாதுகாப்பு பெற புதிய ஆலோசனைக் கோவை

கொழும்பு, நவ.9

வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்கள் பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள் தொடர்பில் சுகாதார மேம்பாட்டு பணியகத்தால் ஆலோசனைக் கோவை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அந்தக் கோவையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,



- ஒருவர் கொரோனா நோயாளியுடன் பழகியிருக்கலாமென்ற சந்தேகம் எழுந்த நாள் முதல் 14 நாள்கள் கட்டாயமாகத் தனிமைப்படுத்தலுக்கு உட்பட வேண்டும்.
- எனினும், வீட்டில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டால், சுகாதாரத் தரப்பினரின் ஆலோசனைக்கமைவாக தனிமைப்படுத்தல் காலம் நீடிக்கப்படலாம்.
- எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வீட்டை விட்டு வெளியேறக்கூடாது. அதேபோன்று, வெளி நபர்கள் எவரையும் வீட்டுக்குள் அனுமதிக்கக்கூடாது.
- இயலுமானவரை, வீடுகளுக்குள் காற்றோட்டத்தைப் பேண வேண்டும்.
- அனைத்து சந்தர்ப்பங்களிலும் வீடுகளுக்குள் ஒவ்வொருவருக்கிடையிலும் ஒரு மீற்றர் இடைவெளியைப் பேண வேண்டும்.
- வீட்டுக்குள் ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது முகக்கவசம் அணிந்திருத்தல் கட்டாயமானது.
- அழுக்கான கைகளால் முகம், வாய், மூக்குப் பகுதிகளைத் தொடக்கூடாது.
- குடும்ப உறுப்பினர்களும் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் 20 விநாடிகள் கைகளை சுத்தமாகக் கழுவ வேண்டும்.
- கை கழுவும் வசதி இல்லாதவிடத்து, கிருமித்தொற்று நீக்கும் திரவத்தை பயன்படுத்தலாம். இயலுமானால், வீட்டிலுள்ள அனைவரும் நாளொன்றில் இரு தடவையேனும், உடல் வெப்பநிலையை பரிசோதித்துக் கொள்ள வேண்டும்.
- வயோதிபர்கள் மற்றும் நீண்ட காலமாக நோய்வாய்ப்பட்டவர்களிடம் விலகியிருத்தல் அவசியமாகும். நீண்ட காலமாக நோய்வாய்ப்பட்டவர்களைப் பராமரிக்க வேண்டிய தேவை காணப்படின், அவர்களுக்கான மருந்துகளை உரிய நேரத்துக்கு வழங்க வேண்டும்.
- இருமல் , தும்மல் வரும்போது ரிஸூத் தாள்களைப் பயன்படுத்தல் அல்லது முகத்தை முழங்கைகளின் உட்புறத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.
- பயன்படுத்தப்பட்ட ரிஸூத் தாள்கள், உரிய வகையில் குப்பைக்கூடைகளுக்குள் அகற்றப்பட வேண்டியது அவசியமாகும்.
- ஆரோக்கியமான உணவுகளை உண்ணுதல் அவசியமானது.
- நாளொன்றில் இரண்டு தொடக்கம் இரண்டரை லீற்றர் வரை தண்ணீர் பருக வேண்டும்.
- ஒருவர், தாம் கொரோனா நோயாளியுடன் பழகியிருக்கலாமென்ற சந்தேகம் எழுந்தால், அவர் தனது வீட்டில் தனி அறையில் தங்க வேண்டும்.
- அத்தகைய ஒருவர்இயலுமானால், குளியலறை மற்றும் கழிப்பறை என்பவற்றை பிரத்தியேகமாக பயன்படுத்த வேண்டுமென்பதுடன், அவற்றைச் சுத்தமாகப் பேண வேண்டும்.

வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டவர்கள், இவை உள்ளிட்ட மேலும் சில சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம், கொரோனாத் தொற்றிலிருந்து தம்மையும் சமூகத்தையும் பாதுகாப்பதற்கான இயலுமை ஏற்படும் என்று சுகாதார மேம்பாட்டு பணியகத்தினால் வெளியிடப் பட் டுள்ள ஆலோசனைக் கோவையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (வ-இ)

## மருத்துவர்கள் உட்பட 10 பேர் தனிமையில்!




கொழும்பு, நவ. 9

ஹோமாகம மருத்துவமனையின் மருத்துவர்கள் உட்பட 10 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த மருத்துவமனையில், கத்திக்குத்தில் காயமடைந்த நிலையில் அனுமதிக்கப்பட்டு அறுவைச் சிகிச்சை மேற்கொண்ட நபர் ஒருவருக்கு எதேச்சையாக மேற்கொண்ட பி.சி.ஆர் பரிசோதனையில் அவர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, குறித்த நபருக்கு சிகிச்சையளித்த மருத்துவர்கள் உட்பட 10 பேர் தனிமைப் படுத்தப்பட்டுள்ளதுடன், மருத்துவமனையின் அவசர சிகிச்சை பிரிவும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. (ந-இ)

## ஆடைத் தொழிற்சாலையில் மேலும் 81 பேருக்கு தொற்று

கொழும்பு, நவ.9

ஹொரணை குரகொட ஆடைத் தொழிற்சாலையில் மேலும் 81 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதையடுத்து அங்கு பதிவான கொரோனா நோயாளர்களின் மொத்த எண்ணிக்கை 159ஆக அதிகரித்துள்ளது.

ஐயாயிரத்து 600க்கும் அதிகமான ஊழி யர்கள் பணியாற்றும் அந்தத் தொழிற்சாலையில் இன்னும் இரண்டாயிரம் பேருக்கான பி.சி. ஆர். பரிசோதனை முடிவுகள் வெளிவரவுள்ளன என ஹொரணை நிர்வாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பி.சி.சேனாரத்ன தெரிவித்துள்ளார். (வ-இ)

## வீதி அபிவிருத்தி செயற்றிட்டம் மட்டக்களப்பில் ஆரம்பம்

மட்டக்களப்பு, நவ.9

மட்டக்களப்பு பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மண்முனை கொக்கட்டிச்சோலை பிரதான வீதி, கடுக்காமுனை மயான வீதி என்பன தலா ஒரு கிலோ மீற்றர் வீதமாக கொங்கிறீட் வீதியாக மாற்றியமைக்கும் வேலைத் திட்டத்தை இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைத்தார்.

நாட்டில் ஒரு லட்சம் கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்தல் எனும் தொனிப்பொருளுக்கமைய ஐந்து கோடியே இருபது இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்தப் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தேசிய வீடமைப்பு அதிகார சபையால் கடுக்காமுனை கிராமத்தில் அமைக்கப்பட்ட வீடு ஒன்று பயனாளி ஒருவரிடம் கையளிக்கப்பட்டுள்ளதுடன் அம்பிளாந்துறை மேற்கு கிராம சேவகர் பிரிவுக்கான குடிநீர் வசதியை ஏற்படுத்திக் கொடுக்கும் ஆரம்பக் கட்ட பணிகளும் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனால் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டன. (வ-150)



## தீபாவளிக் காலத்திலும் வியாபாரம் மந்தகதியில்

*கவலை தெரிவிக்கும் வியாபாரிகள்*

கொரோனாவின் இரண்டாவது அலையின் தாக்கத்தால் கடுமையான பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க நேரிட்டுள்ளது என திருகோணமலை நகர் புற புடவைக் கடை வியாபாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போது தீபாவளி பண்டிகைக் காலத்திலும் வியாபாரங்கள் மந்த கதியில் உள்ளன. இதனால் வங்கிகளின் ஊடாக மேற்கொள்ளப்படும் காசோலை நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளள. கடைகளில் வேலை செய்யும் கூலியாட்களுக்கு சம்பளம் கொடுப்பதில் நெருக்கடிகள் எழுந்துள்ளன எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கொரோனா அச்சுறுத்தலால் பொதுமக்கள் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் தவிர்ந்த ஏனைய பொருள்களை கொள்வனவு செய்வதில் ஆர்வம் இல்லாமல் உள்ளமையைக் காணக்கூடியதாக உள்ளது. (வ-இ)

## சுகாதார அறிவுறுத்தலின்படி தீபாவளியைக் கொண்டாடுக

*இந்து மக்களிடம் கோரிக்கை*

கொழும்பு, நவ. 9

எதிர்வரும் தீபாவளிப் பண்டிகைக் கொண்டாட்டத்தின்போது சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு இந்து மக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள சகல இந்து மக்களிடமும் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.ஸ்ரீதரன் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இதேவேளை, தீபாவளிப் பண்டிகையை வீடுகளில் இருந்து தமிழ் மக்கள் கொண்டாட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்திருந்தது.

இந்துக்களது பாரம்பரியப் பண்டிகைகளில் ஒன்றான தீபாவளிப் பண்டிகையானது இம்மாதம் 14ஆம் திகதி உலக வாழ் இந்துக்களால் கொண்டாடப்படவுள்ளது. (ம-இ)



# இன்றைய நாள்

**மேடம்:** பணியாளர்கள் அனுபவ அறிவால் வெற்றி பெறுவீர்கள். நல்ல செய்தி ஒன்று வரும். பிரச்னையைச் சமாளித்து விடுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் மூலம் தொந்தரவு வரும்.

**இடபம்:** அரசால் நன்மை உண்டு. பணியில் மதிப்பு கூடும். முயற்சியால் முன்னேறுவீர்கள். உடன்பிறந்தோர் உங்கள் நலனில் அக்கறை காட்டுவர். உடல் ஆரோக்கியத்தை காப்பீர்கள்.

**மிதுனம்:** கணவன், மனைவிக்குள் பாசம் குறையாமல் இருக்கும். திடீர் பணவரவு காரணமாகப் புதிய முடிவுகள் எடுப்பீர்கள். உயர் அதிகாரிகள் பாராட்டும் வகையில் நடப்பீர்கள்.

**கடகம்:** புதிய யுக்திகள் கற்பீர்கள். அதிகமாக உழைப்பீர்கள். சிலருக்கு புண்ணியச் செயல்கள் செய்யும் எண்ணம் வரும். எதிர்கால முன்னேற்றம் குறித்து செய்த முயற்சிகள் பயன் தரும்.

**சிம்மம்:** வாழ்க்கைத் துணையின் செயலால் சிறிது ஏமாற்றம் அடைவீர்கள். பணவரவு கூடும். தாழ்வுமனப் பான்மை தலைதூக்க விடாமல் இருங்கள். தாயின் தேவையை அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** வேலையாட்களை சிறிதும் பகைத்துக் கொள்ள வேண்டாம். சிறிய சாதனைகள் மகிழ்ச்சி தரும். செலவுக்கேற்ற வரவு உண்டு. பயம் நீங்கும். கடன் பிரச்சினை பொறுப்பைக் கூடுதலாக்கும்.

**துலாம்:** அனுபவமிக்க பெரியவர்களின் உதவி கிடைக்கும். புதிய முயற்சிகள் தாமதமாகும். காத்திருந்த வாய்ப்பு வரும். அதிகாரிகள் உங்கள் அருமையைப் புரிந்து கொள்வார்கள்.

**விருச்சிகம்:** ஆசைப்பட்ட பொருள்களை வாங்கும் முன் சற்று யோசியுங்கள். இளைஞர்கள் சிறு பயணங்களால் புத்துணர்ச்சி பெறுவீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**தனுசு:** குழந்தைகளின் விருப்பங்களை நிறைவேற்றி மகிழ்விப்பீர்கள். நல்லவர் உதவுவர். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். உங்களைப் பற்றிய வதந்திகள் வராதபடி கவனமாக இருங்கள்.

**மகரம்:** மற்றவர்களின் உதவியை நாட வேண்டிய தேவை வரும். குடும்பத்தில் உள்ள ஒருவர் மூலம் நன்மை அடைவீர்கள். புதிய சாதனையின் மூலம் பலரின் பாராட்டைப் பெறுவீர்கள்

**கும்பம்:** நீங்கள் மதித்து விரும்பும் ஒருவரின் பாராட்டு கிடைக்கும். விட்டுப் போன உறவு பல காலத்துக்குப் பிறகு சமாதானமாகும்.

**மீனம்:** பணியில் உள்ள நெளிவு சுளிவுகளை கற்றுக்கொள்வீர்கள். புதுமை படைக்கும் திறன் பெருகும். நிறையக் கற்பீர்கள். நன்மைகள் ஏற்படும்.

### கொரோனா மூன்றாவது அலையில்

# மாரடைப்பால் இறப்பு ஏற்படுவது குருதியில் கட்டிகள் உருவாகுவதே!

கொழும்பு, நவ. 9
இலங்கையில் பரவும் கொரோனா மூன்றாவது அலையில் ஏற்படும் மரணங்களில், மாரடைப்பால் அதிக மரணங்கள் நிகழ்வதற்கு குருதியில் கட்டிகள் உருவாகுவதே காரணம் என தெரிவித்துள்ளார் கொரோனா நோயாளர்கள் சிகிச்சை பெறும் ஹோமாகம ஆதார மருத்துவமனையில் மருத்துவ ஆலோசகர் மருத்துவர் எரங்க நாரங்கொட. இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

'கொரோனா பெருந்தொற்றின் முதல் அலையில் மாரடைப்பால் கொரோனா நோயாளிகள் இறக்கவில்லை.

ஆனால் இந்த இரண்டாவது அலையில் கொரோனா நோயாளர்கள் மாரடைப்பால் இறப்பது அதிகரித்துள்ளது. நாளங்கள் மற்றும் நரம்புகளில் உருவாகும் கட்டிகளே இவ்வாறு மாரடைப்பை ஏற்படுத்துகின்றன - என்றார். (ம-இ)

## கொரோனா சிகிச்சைக்கு புதிய நிலையம் திறப்பு

கொழும்பு, நவ. 9
கொரோனாத் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காகப் புனானியில் உள்ள சிறப்புச் சிகிச்சையளிப்பு மருத்துவமனைக்கு அனைத்து வசதிகளுடனும் கூடிய புதிய கட்டடத் தொகுதி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் ஒரே நேரத்தில் 2 ஆயிரத்து 200 பேர் சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் எதிர்காலத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்குமாயின் இந்த கட்டடத் தொகுதியைப் பயன்படுத்த உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ந-இ)

## ஒரு மீற்றரைக் தாண்டியது கொரோனா இடைவெளி

கொழும்பு, நவ. 9
கொரோனா வைரஸின் வீரியம் அதிகரித்துள்ளதன் அடிப்படையில் சமூக இடைவெளியை ஒரு மீற்றருக்கு மேல் கடைப்பிடிக்க வேண்டும் என சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் ஜயருவன் பண்டார தெரிவித்துள்ளார்.

அதன்படி, ஒன்றரை அல்லது இரண்டு மீற்றர் சமூக இடைவெளியைக் கடைபிடிக்க வேண்டும் எனவும் இந்த நோயைக் கட்டுப்படுத்துவது மக்களின் நடவடிக்கைகளிலேயே தங்கியுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)


# படகில் மாற்றப்பட்ட 5,711 கிலோ மஞ்சள்

### இந்தியர்கள் உட்பட 6 பேர் கைது

கொழும்பு, நவ. 9
சட்டவிரோதமான முறையில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கடத்தப்பட்ட 5 ஆயிரத்து 711 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் கட்டி மூடைகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கற்பிட்டி குதிரைமலை கடற்கரைப் பகுதியில் இந்தியத் தாவ் படகு மூலமாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட குறித்த மஞ்சள் கட்டிகள் அடங்கிய மூடைகள் இரண்டு மீன்பிடிப் படகில் ஏற்றிக்கொண்டிருந்தபோது கைப்பற்றப்பட்டுள்ளன. இதன்போது மீன்பிடிப் படகில் இருந்த இலங்கைப் பிரஜைகள் இருவரும், இந்திய தாவ் படகில் இருந்த நால்வரும் இந்தியப் பிரஜைகளும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட நபர்களிடமிருந்து 3 ஆயிரத்து 218 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளைத் தொடர்ந்து கற்பிட்டி பகுதியில் உரைப் பைகளில் பொதி செய்யப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த மேலும் 2 ஆயிரத்து 493 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் என்பனவும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள், பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளனர். (ந-இ)

## மின் கட்டணங்களுக்கு விசேட சலுகை



கொழும்பு, நவ. 9
மேல் மாகாணத்தில் மின் கட்டணங்கள் உரிய காலத்தில் செலுத்தப்படாவிட்டாலும் மின் துண்டிப்பு செய்யப்படாதென இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.


தற்போது மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு அமுலில் இருப்பதால், மின் கட்டணங்களைச் செலுத்துவதில் நுகர்வோர் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இதனையடுத்தே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வழமையான மின் வாசிப்பு நடவடிக்கை சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் சுகாதார வழிமுறைகளுக்கு அமைய முன்னெடுக்கப்படுமென்றும் இலங்கை மின்சார சபையின் தலைவர் தெரிவித்துள்ளார். (ந-இ)

# தமிழர் பிரச்சினையைக் கையாள துறைசார் நிபுணர்குழு அவசியம்!

கொழும்பு, நவ. 9
தமிழ் மக்களின் பிரச்சினைகளை கையாள்வதற்காக துறைசார் நிபுணர் குழுவொன்றை நியமிக்குமாறு இந்திய இராஜதந்திர தரப்புக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கோரியுள்ளன. தொல்பொருள், பண்பாட்டு, கலாசார ரீதியாக ஆக்கிரமிக்கப்படும் செயற்பாடுகள் அல்லது திட்டமிட்டு மாற்றியமைக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பாக கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகளுடனான பல்வேறு தொடர்பாடல்கள் மற்றும் சந்திப்புக்களின்போது இந்திய இராஜதந்திர தரப்புக்கள் இவ்வாறு வலியுறுத்தியுள்ளன. (ம-இ)



கொரோனாத் தொற்று

## இலங்கையர் 30 பேர் வெளிநாடுகளில் சாவு

கொழும்பு, நவ. 9

உலகளாவிய கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக, இலங்கையர் 90 பேர், வெளிநாடுகளில் உயிரிழந்துள்ளனர் என்று இலங்கை வெளிநாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

சவூதி அரேபியாவில் 31 பேரும், குவைத்தில் 20 பேரும், ஐக்கிய அரபு இராச்சியத்தில் 10 பேரும், கட்டாரில் 06 பேரும், ஐக்கிய இராச்சியத்தில் 05 பேரும் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, ஓமான், அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகளில் தலா 04 பேர் வீதம் 12 பேரும், பஹ்ரைன், ஜேர்மனி ஆகிய நாடுகளில் தலா 02 பேர் வீதம் 04 பேரும், இஸ்ரேல், இத்தாலி ஆகிய நாடுகளில் தலா ஒருவர் வீதமும் உயிரிழந்துள்ளனர் என்று அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (த-இ)

# பல்கலைகளுக்கு மாணவர்களை தெரிவுசெய்வதில் அரசு குளறுபடி

### விளக்கம் கோருகின்றது அனைத்துப் பல்கலை மாணவர் ஒன்றியம்

கொழும்பு, நவ. 9

**2019 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களை வெட்டுப்புள்ளி அடிப்படையில் பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவுசெய்வதில் அநீதி இடம்பெற்றுள்ளது. மாணவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வலியுறுத்தியிருக்கிறது.**

ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் ரத்கரவே ஜீவரத்ன தேரர் இது பற்றி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்கவுக்கு அனுப்பிய கடிதத்தில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டில் சுமார் ஒரு லட்சத்து 81 ஆயிரம் மாணவர்கள் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். எனினும், சுமார் 40 ஆயிரம் மாணவர்கள் மாத்திரமே பல்கலைக் கழகங்களுக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர். எஞ்சிய ஒரு லட்சத்து 41 ஆயிரம் மாணவர்கள் உயர்கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்பு வரையறுக்கப்பட்டுள்ளது.

இந்தமுறை பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை உள்வாங்கும் எண்ணிக்கை 10 ஆயிரத்தால் அதிகரிக்கப்பட்டிருப்பதாக அரசு கூறியிருப்பினும், அது நம்பக்கூடியதாக இல்லை. ஏனெனில் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்தால், அதற்காக ஒதுக்கப்படும் நிதி உள்ளீட்ட வளங்களின் அளவிலும் அதிகரிப்பு ஏற்பட வேண்டும்.

ஆனால் 2020 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்டதை விடவும் 40 பில்லியன் ரூபா குறைவாகவே 2021 ஆம் ஆண்டுக்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

எனவே 2019 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் வெட்டுப்புள்ளியின் அடிப்படையில் பாதிப்பை எதிர்கொண்டுள்ள மாணவர்களுக்குத் தீர்வைப்பெற்றுக்கொடுக்க வேண்டும்.

இது பற்றி கலந்துரையாடுவதற்கு எமக்குச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும். என்று கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. (த-இ)

## ஊரடங்கு வேளையில் பயணிக்க நிறுவன அ.அட்டை போதுமானது

*பொலிஸார் அறிவிப்பு*




கொழும்பு, நவ.9

தனிப்பட்ட பாதுகாப்புச் சேவைகளில் ஈடுபடும் நபர்கள் நிறுவன அடையாள அட்டையைப் பயன்படுத்தி ஊரடங்குக் காலப்பகுதினுள் பயணிக்க முடியும் என பொலிஸார் தெரிவித்தனர்.

பொருளாதார மத்திய நிலையங்களுக்காகப் பொருள்களைக் கொண்டு செல்லும் நபர்கள் குறித்த மத்திய நிலையங்களின் முகாமையாளர்களின் கடிதமொன்றைச் சமர்ப்பித்து பொருள்களைக் கொண்டு செல்ல முடியும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அரச மற்றும் அரச சார்பற்ற 107 நிறுவனங்களின் ஊழியர்களுக்கு உத்தியோகபூர்வ அடையாள அட்டையை ஊரடங்கு காலப்பகுதியில் பயன்படுத்தி பயணிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ப-இ)

## தொழிற்படு மூலதனக்கடன் சலுகைக் காலம் நீடிப்பு

கொழும்பு, நவ. 9

கொவிட்-19 உலகளாவிய நோய்த் தொற்றுக் காரணமாக பாதிக்கப்பட்ட தொழில்களைச் சீரமைக்கும் தேசிய முக்கியத்துவத்தினை இனங்கண்டு, 6 மாத காலப்பகுதியைக் கொண்ட சலுகைக் காலம் உள்ளடங்கலாக 24 மாதங்களைக் கொண்ட மீள்கொடுப்பனவு காலப்பகுதியொன்றுடன் கூடிய ஆண்டுக்கு 4 சதவீத வட்டி வீதத்தில் மூலதனக் கடன்களை வழங்குவதற்காக சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் கடன் திட்ட வசதி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் ஆலோசனையுடன் இலங்கை மத்திய வங்கி 3 கட்டங்களில் இதை நடைமுறைப்படுத்தியுள்ளது.

சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் கடன் வசதியின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கடன்களுக்கு ஏற்புடைய சலுகைக் காலத்தை, கடன்பெறுநர்களால் முன்வைக்கப்படுகின்ற எழுத்திலான கோரிக்கையின் மீது மேலும் மூன்று (03) மாதங்களால் நீடிப்பதற்கு தீர்மானித்துள்ளது. அதற்கமைய, 9 மாதங்களைக் கொண்ட சலுகைக் காலப்பகுதியொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு விரும்புகின்ற இத் தொழிற்படு மூலதனத் திட்டங்களின் பயனாளிகள் தொடர்புடைய வங்கிக்கு எழுத்திலான கோரிக்கையொன்றை அனுப்புமாறு கோரப்படுகின்றனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-இ)

## தவிசாளரின் அனுமதியை உதறும் சபையின் செயலர்

*பூநகரில் சம்பவம்*

பூநகரி, நவ.9

பூநகரி பிரதேச சபையின் தவிசாளரால் வியாபாரிகளுக்கு வழங்கப்பட்ட காணியை மீளப்பெறும் முயற்சியில் பிரதேச சபைச் செயலர் ஈடுபட்டுள்ளார் என்று பூநகரி வாடியடிச் சந்தியின் சந்தைக் கட்டடத் தொகுதி வியாபாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

தனியார் ஒருவரின் காணியில் தற்காலிகக் கடை அமைத்து வியாபாரம் மேற்கொண்டு வந்த வியாபாரிகளுக்கு, வாடியடிச் சந்தியிலுள்ள பிரதேச சபைக்குட்பட்ட சந்தைப்பகுதில் கடை கட்டிய தவிசாளர் அதனை வியாபாரிகளிடமே கையளித்தார். எனினும் பூநகரி பிரதேச சபை செயலாளர், பிரதேச சபைக் காணிக்குள் கடை கட்டுவது சட்டவிரோதமானது ஆகவே அந்தக் கட்டடத்தை இடிக்கப்போவதாக தற்பொழுது அறிவித்துள்ளார். மிகவும் வருமானம் குறைந்த நிலையிலுள்ள எமக்கு இழப்பேற்படுத்தும் இந்தச்செயற்பாடு தொடர்பில் கவலையடைகிறோம். தவிசாளரும் பிரதேச சபை செயலாளரும் இணைந்து செயற்படாமையே இதற்குக் காரணம் என்றனர். (ஜ-ரி1)

## ஊரடங்கில் பயணித்த சாரதிகளுக்கு வழக்கு



வாழைச்சேனை,நவ.9

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் ஊரடங்கு வேளையில் அனுமதியின்றி பயணித்த 5 வாகன சாரதிகளுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

இதேவேளை மயிலங்கரைச்சை பகுதியில் கஞ்சா போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபர்கள் 6 பேரும் மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டனர் என்று வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார். (ஜ-150)



## அறிகுறிகள் இல்லாதும் கொரோனா தொற்றும்?

கொழும்பு, நவ.9
இலங்கையில் அடையாளம் காணப்படும் கொரோனாத் தொற்றாளர்களில் பெரும்பாலானோருக்கு, நோய் அறிகுறிகள் தென்படவில்லை என, தொற்று நோயியல் விஞ்ஞானப் பிரிவின் பிரதானி, மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.
இலங்கையில் இதுவரை 6 லட்சம் பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ப-இ)

# எந்தப் பதவியும் இனி வேண்டாம்

### மஹிந்த தேசப்பிரிய முடிவு



கொழும்பு, நவ.9
**தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் பதவியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் எந்தவொரு பதவியையும் ஏற்கப்போவதில்லை என்று மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.**

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவராகச் செயற்படும் மஹிந்த தேசப்பிரிய எதிர்வரும் 12 ஆம் திகதியுடன் அதிலிருந்து ஓய்வு பெறவுள்ளார். இதனையடுத்து அவருக்கு வெளிநாட்டுத் தூதுவர் பதவியொன்று வழங்கப்படவுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன. இது தொடர்பில் மஹிந்த தேசப்பிரிய விடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
"அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் தூதுவர் பதவி அல்ல, எந்தவொரு பதவியையும் ஏற்க நான் தயாரில்லை. ஓய்வுக் காலத்தை மிகவும் அமைதியான முறையில் வாழ விரும்புகின்றேன். எனது ஓய்வை ஏற்கனவே அறிவித்துவிட்டேன். நான் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளராக இருந்த காலப்பகுதியில் எனக்கு எவரும் அழுத்தங்களைப் பிரயோகிக்கவில்லை. மாகாணசபைத் தேர்தலை உரிய நேரத்தில் நடத்தமுடியாமல் போனது கவலைதான்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப)

## பஸ் நிலையத் திரையில் ஆபாசப் படக் காணொலி

### விசாரணைக்கு உத்தரவு



குருநாகல், நவ.9
பிரதான பேருந்து தரிப்பிடத்தில் உள்ள தொலைக்காட்சித் திரை ஒன்றில், ஆபாசப் படம் காட்சிப்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் விடயம் தொடர்பில் விசாரணை நடத்துமாறு பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
குருநாகல் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குருநாகல் மாநகர சபை எல்லையில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டபோது, மூடப்பட்டுள்ள பிரதான பேருந்து தரிப்பிடத்தில் உள்ள தொலைக்காட்சித் திரையிலேயே இவ்வாறு ஆபாசப் படம் காட்சிப்படுத்தப்பட்டது என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.
பாலியல் உறவுக் காட்சிகள் அடங்கிய ஆபாச வீடியோக் காட்சிகள் அங்கு திரையிடப்படுவதை அங்கிருந்த ஒருவர் ஒளிப்பதிவு செய்து சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார். இந் நிலையிலேயே, இது தொடர்பில் உடனடியாக விசாரணைகளை நடத்தி இதற்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களைக் கைதுசெய்ய சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு மாநகர மேயர் அறிவித்துள்ளார். (ப-இ)

## வங்கிகளின் ஊழியர்களுக்கு பி. சி. ஆர்.



கொழும்பு, நவ.9
அளுத்கம நகரிலுள்ள அரச மற்றும் தனியார் வங்கிகளில் பணிபுரியும் நூறு ஊழியர்கள், பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.
அளுத்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கொரோனாத் தொற்றாளர்களாக 9 பேர் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், பேருவளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மொத்தமாக 69 தொற்றாளர்கள் இதுவரை இனங்காணப்பட்டுள்ளனர் என்று, பேருவளை சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலம் தெரிவித்துள்ளது. (ப)

## கொரோனா நோயாளிக்கு ஆரோக்கியமான குழந்தை

### சிசேரியன் மூலம் பிறந்தது



கொழும்பு, நவ.9
கொவிட் -19 வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள கர்ப்பிணித் தாய் ஒருவர், சிசேரியன் சத்திர சிகிச்சை ஊடாக ஆரோக்கியமான குழந்தையைப் பிரசவித்துள்ளார்.
கொவிட் தொற்றுக்கு உள்ளான கர்ப்பிணித் தாய்மாருக்கு சிகிச்சையளிக்கவென விசேட ஏற்பாடுகளைக் கொண்ட கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையில் (முல்லேரியா) மேற்கொள்ளப்பட்ட விசேட சிஷேரியன் சத்திர சிகிச்சையின்போதே இந்த ஆரோக்கியமான, கொவிட் தொற்று அற்ற குழந்தையை அந்தத் தாய் பிரசவித்துள்ளார். (ப-இ)

## கொரோனா தொடர்பில் அரசுக்கு அக்கறையில்லை

### குற்றஞ்சாட்டுகிறது எதிர்க் கட்சி

கொழும்பு, நவ.9
அரசாங்கம் கொவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளிலிருந்து விலகியுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தி குற்றஞ் சாட்டியுள்ளது.
இது தொடர்பில் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி மேலும் தெரிவித்ததாவது;
கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளிலிருந்து அரசாங்கம் விலகியுள்ளது. இதனால் உயிரிழப்புகள் அதிகளவில் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன. நவம்பர் மாதம் 2 ஆம் திகதி பொதுஜன பெரமுனவின் நான்கு ஆண்டு நிறைவைக் கொண்டாட வேண்டும். அத்துடன் நவம்பர் மாதம் 16 ஆம் திகதி ஜனாதிபதியாக கோத்தபாய ராஜபக்ஷ தெரிவுசெய்யப்பட்டு ஓராண்டு நிறைவடைகின்றது. இந்த இரண்டு நிகழ்வுகளையும் கொண்டாடுவதற்காகவா? அல்லது எல்.பி.எல் கிரிக்கெட் போட்டித் தொடரை நடத்துவதற்காகவா? இவ்வாறு இடம்பெறுகின்றது - என்றார். (ப-இ)

## பொலிஸாருக்கே சாராயம் விற்பனை

### ஒருவர் சிக்கினார்



கொடிகாமம், நவ , 9
அரச சீல் சாராயத்தை சட்ட விரோதமாக பொலிஸாருக்கே விற்பனை செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.
கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எழுதுமட்டுவாழ் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
அரச சீல் சாராயம் சட்ட விரோதமாக விற்பனை செய்யப்படுகிறது என்ற தகவலுக்கு அமைய சம்பவ இடத்துக்கு பொலிஸார் சிவில் உடையில் சென்ற போது, குறித்த நபர் பொலிஸாருக்கும் சாராயத்தை விற்பனை செய்தபோது கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ப-159)

## மாஸ்க் அணியாதோருக்கு எதிராக வழக்குகள் பதிவு



சாவகச்சேரி, நவ. 9
சாவகச்சேரி நகரப் பகுதி மற்றும் சந்தை போன்றவற்றில் முகக்கவசம் இன்றி காணப்பட்டோருக்கு எதிராக சாவகச்சேரி பொலிஸாரால் நேற்று முன்தினம் வழக்குகள் பதிவு செய்யப்படடன.
கடந்த வாரம் தொடக்கம் கொரோனா தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகளை மேற்கொண்டு வரும் பொலிஸார், நகரப் பகுதியில் நடமாடுவோர் மற்றும் வாகனங்களில் பயணிப்போரை முகக்கவசம் அணியுமாறு எச்சரிக்கை செய்து வருகின்றனர்.
இரு தினங்களுக்கு முன்னர் சாவகச்சேரி நகரப் பகுதியில் நடமாடுவோர் மற்றும் சந்தை வியாபாரிகள், நுகர்வோர் ஆகியோருக்கு இலவசமாக முகக்கவசங்களும் வழங்கப்பட்டன.
இந்நிலையில் நேற்று சாவகச்சேரி பொலிஸ் நிலைய தலைமைக் காரியாலய பொறுப்பதிகாரி ஆர்.எஸ். ராஜபக்ஸ தலைமையிலான பொலிஸார் சாவகச்சேரி நகர்ப்பகுதியில் முகக்கவசம் அணியாதோருக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்தனர்.
இந்த வழக்குகளுக்கான விசாரணை எதிர்வரும் ஜனவரி மாதம் சாவகச்சேரி நீதிமன்றில் நடைபெறும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-9)

# கட்டுப்பாட்டு விலை நிர்ணயத்தால் அரிசிக்கு பற்றாக்குறை ஏற்படலாம்

## வர்த்தகர்கள் எச்சரிக்கை




கொழும்பு, நவ.9

**அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ள அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை நிர்ணயத்தால் நாட்டில் அரிசிக்குப் பற்றாக்குறை ஏற்படலாம் என்று வர்த்தகர்கள் எச்சரித்துள்ளனர்.**

கடந்த சில நாள்களுக்கு முன்னர் அரசாங்கம் அரிசிக்கான ஆகக்கூடியசில்லறைவிலையை நிர்ணயித்தது. இதன்படி சம்பா 94 ரூபாவாகவும், நாடு 92 ரூபாவாகவும், சிவப்பு பச்சையரிசி 89 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படவேண்டும் என்று வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இந்தநிலையிலேயே வர்த்தகர்கள் மேற்கண்டவாறு எச்சரித்துள்ளனர்.

அரசாங்கம்அறிவித்துள்ளஆகக்கூடிய சில்லறை விலைக்கு குறைவாக தமக்கு அரசியைக் கொள்வனவு செய்ய முடியாதுள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ள வர்த்தகர்கள் உற்பத்தி மற்றும் போக்குவரத்துச் செலவுகளை உள்ளடக்கிய வகையில் குறித்த விலைக்கு அரிசியை விற்பனை செய்ய முடியாது என்றும் தெரிவித்துள்ளனர்.

எனினும் அரசாங்கம் விதித்துள்ள ஆகக்கூடிய சில்லறை விலை அறிவிப்பை வர்த்தகர்கள் செயற்படுத்த வேண்டும் என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார் என ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. பெரிய மற்றும் சிறிய அரசி ஆலை உரிமையாளர்கள் வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய அரிசியை குறைந்த விலைக்கு விற்பனை செய்ய இணக்கம் வெளியிட்டுள்ளனர் எனவும் அந்த ஊடகம் வெளியிட்ட செய்தியில் குறிப்பி டப்பட்டுள்ளது. (ப-இ)



# கொரோனாவிலிருந்து மீள மிருத்திஞ்ச ஹோம யாகம்

## முல்லையில் முன்னெடுப்பு

முல்லைத்தீவு, நவ.9

கொரோனா வைரஸ் தாக்கத்தில் இருந்து நாட்டு மக்களைப் பாதுகாக்க வேண்டி முல்லைத்தீவில் மிருத்திஞ்ச ஹோம யாக பூசை வழிபாடுகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம், புதுக்குடியிருப்பு ஸ்ரீ கந்தசாமி ஆலயம் ஆகியவற்றில் இந்த யாக பூசை வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

பிரதமர் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய முன்னெடுக்கப்பட்ட இந்த யாகங்களில் முல்லைத்தீவு மாவட்டச் செயலர், பிரதேச செயலர்கள், மாவட்ட அந்தணர் அமையத்தினர், ஆலய பரிபாலன சபையினர், ஆலய நிர்வாகத்தினர், புதுக்குடியிருப்பு பொலிஸார், சைவ அருள் நெறிக் கழகத்தினர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ப-19)

# வறண்டது வவுனியா; 492 குடும்பங்கள் பாதிப்பு

வவுனியா, நவ. 9

வவுனியாவில் கடந்த சில மாதங்களாக நீடித்த வறட்சியான காலநிலையால் 492 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் அறிக்கையிட்டுள்ளது.

ஜூன் மாதத்திலிருந்து அங்கு வறட்சி நீடிக்கின்றது. வழமையாக ஒக்ரோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் மழை கிடைக்கும். ஆனால் இம்முறை ஒக்ரோபர் மாதத்திலும் வறட்சியான காலநிலையே நீடித்தது. குளங்கள், கிணறுகள் மற்றும் நீர் நிலைகளில் நீர் பெருமளவு வற்றி காய்ந்து வறண்டு கிடக்கின்றன.


வவுனியா பிரதேச செயலக பிரிவில் ஓமந்தையில் 20 குடும்பங்களைச் சேர்ந்த 93 பேரும், வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவில் ஊஞ்சல் கட்டியில் 25 குடும்பங்களைச் சேர்ந்த 99 பேரும், மருதோடையில் 21 குடும்பங்களைச் சேர்ந்த 74 பேரும், கற்குளத்தில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 16 பேரும், வெடிவைத்தகல்லில் 420 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 20 பேரும், சின்னடப்பனில் 20 குடும்பங்களைச் சேர்ந்த 82 பேரும் என்று 492 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 471 பேர் குடிதண்ணீர் தட்டுப்பாட்டை எதிர்கொண்டுள்ளனர்.

இவர்களுக்கான குடிதண்ணீரானது மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தால் பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றது. இதுவரை 3 இலட்சத்து 54 ஆயிரத்து 448 ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. (ஒ-18)

கொரோனா

# 7 மாதங்களில் 3 ஆயிரம் ஒரு மாதத்தில் 10 ஆயிரம்

## பாரதூரத்தை அரசு மறைக்கிறதா என்று ஜே.வி.பி. கேள்வி



கொழும்பு, நவ. 9

கொரோனா நோய்த் தொற்று மூன்றாம் அலையின் பாரதூரத் தன்மையை அரசு மூடி மறைக்கின்றதா என்ற கேள்வி எழுந்துள்ளது என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மார்ச் மாதம் முதல் செப்ரெம்பர் மாதம் வரையில் மூவாயிரம் நோயாளிகள் பதிவாகியிருந்தபோதிலும் கடந்த ஒரு மாத காலப் பகுதியில் பத்தாயிரம் நோயாளிகள் பதிவாகி உள்ளனர்.

இது பாரதூரமான ஓர் நிலைமை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முதலாம் அலையின் போது நோயாளிகள் குறிப்பிட்ட இடங்களிலிருந்து பதிவாகியிருந்தனர் என்ற போதிலும் இம்முறை அவ்வாறு இல்லாமல் பல்வேறு இடங்களிலும் நோயாளிகள் பதிவாகின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ-இ)



# யாசகர்களை விரட்டிய கொரோனாத் தொற்று

வவுனியா, நவ.9

யாசகம் செய்ய வேண்டாம் என்று பலர் எச்சரித்தும், உள்ளூராட்சி மன்றங்களூடாகத் தீர்மானங்களைக் கொண்டுவந்தபோதும் அடங்க மறுத்து, தொடந்தும் யாசகத்தில் ஈடுபட்டு வந்தவர்களுக்கு கொரோனா தக்க பாடத்தைக் கற்பித்துள்ளது.

வெளிமாவட்டங்களில் இருந்துவவுனியாவுக்கு வந்து தங்கியிருந்து யாசகத்தில் ஈடுபட்ட யாகசர்கள் கொரோனா காரணமாக தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளனர். யாசகர்களினால் கொவிட் 19 அச்சம் பொதுமக்களிடையே ஏற்பட்டுள்ள நிலையில் வவுனியாவில் தங்கியுள்ள யாசகர்களை வெளியேற்றுமாறு மக்கள் கேட்டுக்கொண்டனர். இந்த நிலையிலேயே யாசகர்கள் நேற்று தமது சொந்த இடங்களுக்குத் திரும்பினர்.

வவுனியாவுக்கு வரும் யாசகர்கள் தங்கிருக்கும் பகுதியான குடியிருப்பு குளக்கரைப் பகுதியில் 8 யாசகர்கள் தங்கியிருந்தனர். வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர் விக்டர்ராஜ், மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க.தியாகலிங்கம், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் இளங்கேஸ் ஆகியோர் அங்கு சென்று யாசகர்களை அவர்களது சொந்த இடங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தினர். இதனை அடுத்து அங்கிருந்து செல்வதாக யாசகர்கள் தெரிவித்து தமது சொந்த ஊர்களுக்குப் புறப்பட்டனர். (ப-

# அரசின் முடிவை ஆமோதிக்கும் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள்

கொழும்பு, நவ. 9

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக நாடு முழுவதையும் முடக்கத் தேவையில்லை என்று 6 பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த பேராசிரியர்கள், கொரோனா தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவர் இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்குக் கடிதமொன்றை எழுதியுள்ளனர்.

களனி, ருகுனு, பேராதெனிய, ரஜரட்ட, கொழும்பு, ஜயவர்த்தன ஆகிய பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த பேராசிரியர் குழுவே கடிதத்தை எழுதியுள்ளது. (ஒ-இ)

# சுற்றுச்சூழல் பாதிப்படைய அதிகாரிகள்தான் காரணம்!

## குற்றஞ்சாட்டுகின்றார் அமைச்சர் அமரவீர

கொழும்பு, நவ. 9

தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்ததிலிருந்து இலங்கையில் சுற்றுச்சூழல் பாதிப்பு அதிகரித்துள்ளது என்று வெளியாகும் தகவல்களை 'தவறான செய்தி புனைகதை' என ஜனாதிபதி நிராகரித்த நிலையில், சுற்றுச்சூழல் அழிவுக்கான பொறுப்பை அரச அதிகாரிகள் மீது சுமத்தியுள்ளார் அமைச்சர் மஹிந்த அமரவீர.

அதிகாரிகளின் திறமையின்மை மற்றும் அலட்சியம் காரணமாகவே சுற்றாடல் பாதிப்பு இடம்பெறுகின்றது என்று அமைச்சர் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்தநிலையில், சுற்றுச்சூழல் அதிகாரிகளை வரவழைத்து, அவர்கள் தத்தம் கடமைகளையும் பொறுப்புகளையும் சரியாகச் செய்கிறார்களா என்பது குறித்து, விசாரணை மேற்கொள்ளுமாறு மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபைக்கு, அமைச்சர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார் என்று அரச தகவல் திணைக்களம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, காடழிப்பு இடம்பெறுவதை ஏற்றுக் கொள்கின்றேன் என்று தெரிவித்த பாதுகாப்பு செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன, ஜனாதிபதியின் சகோதரரும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான சமல் ராஜபக்சவுடன் இணைந்து இதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

சுற்றுச்சூழல் பாதிப்புக் குறித்த தகவல்களை வழங்க, அமைச்சர் மஹிந்த அமரவீர, தனது தனிப்பட்ட அலைபேசி இலக்கமான 0707555666 க்கு வட்ஸ் அப் தகவல், குறுந்தகவல் அல்லது காணொலிகளை அனுப்புமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் தகவல்களை வழங்க, சுற்றாடல் அமைச்சு 1991, மத்திய சுற்றாடல் அதிகாரசபை 1981, புவியியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகம் 1921 ஆகிய இலக்கங்களுக்குத் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (த-இ)

# நிதி கையாடல் செய்தவர் ஏன் இன்னும் கைதாகவில்லை?

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கேள்வி

யாழ்ப்பாணம், நவ. 9

**நிதி மோசடியில் ஈடுபட்டவர் இன்னும் கைதுசெய்யப்படாமை வேதனை தரும் விடயம் எனச் சுட்டிக்காட்டியுள்ள இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் சந்தேகத்தையும் கண்டனத்தையும் வெளியிட்டுள்ளது.**

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் இடம்பெற்றுள்ள நிதி மோசடி தொடர்பாக சம்பந்தப்பட்டவர் இன்னும் கைதுசெய்யப்படாமை வேதனையான விடயம் என்பதற்கு அப்பால் பல சந்தேகங்களையும் உருவாக்குகின்றது.

நிதி மோசடியில் ஈடுபட்டவர் யார் என்பது கண்டறியப்பட்டுள்ளது. கல்வி வலயத்தில் மிகவும் நம்பிக்கைக்கு உரியவராகத் தன்னைக் காட்டிக்கொண்டு, உயர் அதிகாரிகளை ஏமாற்றி நிதி மோசடியில் ஈடுபட்டவரை சுதந்திரமாக நடமாட விட்டுவிட்டு, தற்போதுள்ள அபாயகரமான சூழ்நிலையில் பலரை கொழும்புக்கு அழைத்து விசாரிப்பதன் மர்மம் என்ன? குற்றவாளி என கண்டறியப்பட்டவரை கைதுசெய்து அவரூடாக அனைத்தையும் அறிவதே பிரதானமான விடயம். சம்பந்தமில்லாதவர்களை அழைத்து விசாரணை நடாத்தினால் கிடைக்கப்போவது எதுவுமில்லை. மாறாக விசாரணை என்ற போர்வையில் இழுத்தடிப்புகள் மட்டுமே மிஞ்சும்.

குற்றவாளி என இனங்காணப்பட்டவரை உடன் கைதுசெய்து உரிய இடத்தில் வைத்தே விசாரணை செய்யுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வலியுறுத்தியுள்ளது. (ஒ-20)

# எல்லைக்கல் நடுகையால் மட்டுவில் மக்கள் குழப்பம்

சாவகச்சேரி, நவ. 9

சாவகச்சேரி மட்டுவில் வடக்கு ஆயத்தடிப் பகுதியில் வன பரிபாலன திணைக்களத்தினர் முன்னறிவித்தலின்றி நேற்று எல்லைக்கற்கள் நட்டமையால் பொதுமக்கள் குழப்பமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. அங்கு ஆயத்தடி மற்றும் வண்ணாத்திப்பாலம் பகுதிகளில் தனியார் மற்றும் அரசு காணிகளைக் கையகப்படுத்தும் நோக்கில் எல்லைக் கற்கள் நட்டுள்ளனர். அதற்குள் நெல்வயல்கள், கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகள் போன்றவையும் அரசின் பொருளாதார மத்திய நிலையம் மற்றும் காணிகள் என்பனவையும் உள்ளன. இந்தநிலையில் எல்லைக்கற்கள் நடப்பட்டமையால் தமது காணிகளும் பறிபோய்விடுமோ என்ற அச்சம் மக்களிடையே காணப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (த-9)

# 3 ஆம் அலை கட்டுப்படுத்தப்பட அடுத்த அலை உருவாகும்

## கட்டியம் கூறுகிறார் சஜித்

கொழும்பு, நவ. 9

கொரோனாவின் மூன்றாவது அலை கட்டுப்படுத்தப்படும் தருணத்தில் நான்காவது அலை உருவாகிவிடும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அரசின் தவறான முடிவுகளே நாட்டில் கொரோனா தொடர்ந்தும் பரவுவதற்கு காரணம் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பெருமளவானவர்கள் முகாம்களுக்கு அனுப்பப்பட்டுள்ள போதிலும் அவர்கள் அனைவரும் பிசிஆர் சோதனைக்கு உட்படுத்தப்படாததை தரவுகள் வெளிப்படுத்தியுள்ளன என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ-இ)

# ஊரடங்கை தளர்த்துவது அதிர்ச்சியளிக்கின்றது

## சஜித் அணி எம்.பி.

கொழும்பு, நவ. 9

கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்துவரும் நிலையில் மேல்மாகாணத்தில் ஊரடங்கைத் தளர்த்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளமை குறித்து ஐக்கிய மக்கள் சக்தி அதிர்ச்சி வெளியிட்டுள்ளது. பொது மக்களின் நலன் மற்றும் பாதுகாப்பு குறித்த விடயத்தில் அரசு பொறுப்பற்ற விதத்தில் செயற்படுகின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராஜகருணா தெரிவித்துள்ளார்.

வைரஸை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்கவில்லை என குறிப்பிட்டுள்ள அவர் அரசை நம்பியிருக்காமல் மக்கள் தங்கள் உடல்நலத்தையும் பாதுகாப்பையும் உறுதி செய்யவேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளதால் மக்களின் மீது சுமைகள் சுமத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள அவர் பொதுமக்களுக்கு சலுகைகளை வழங்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஒ-இ)

# சுகாதாரப் பொறிமுறையின்படி இன்று முதல் ரயில் சேவைகள்



கொழும்பு, நவ. 9

சுகாதார வழிகாட்டல்களின் பிரகாரம் இன்றுமுதல் ரயில்கள் சேவையில் ஈடுபடுமென ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

பிரதான சேவைகள், கரையோர சேவைகள், புத்தளம் சேவை, களனி சேவை, வடக்குச் சேவை ஆகியனவே இன்று ஆரம்பிக்கப்படவுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-இ)

# தனிமைப்படுத்தப்பட்டவர் சாவு; கொரோனாவா எனச் சந்தேகம்!

கொழும்பு, நவ. 9

சிலாபம் பகுதியில் சுகாதார ஆலோசனைகளுக்கமைய தனிமைப்படுத்தப்பட்டிருந்த ஒருவர் திடீரென உயிரிழந்துள்ளார். அவர் கொரோனாத் தொற்றால்தான் இறந்தாரா என்பது தொடர்பில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உயிரிழந்தவர் பிங்கிரியகல பானவெ பிரதேசத்தைச் சேர்ந்தவர். அவருக்கு வயது 71. தனது வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த அவர் திடீர் சுகவீனம் காரணமாக சிலாபம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதே உயிரிழந்தார். (ம-இ)

# மாத்தறை சிறையிலும் கொரோனாத் தொற்று

கொழும்பு, நவ. 9

மாத்தறை சிறைச்சாலையிலும் கொரோனாத் தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்று சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த மாதம் முதலாம் திகதி வெலிக்கடை சிறையிலிருந்து மாத்தறை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட பெண் கைதியொருவருக்கே இவ்வாறு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு மாற்றப்பட்ட 7 கைதிகளின் மாதிரிகள் சோதிக்கப்பட்டதிலேயே மேற்படி பெண்ணுக்கு கொரோனா இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. (ம-இ)

# உடற்கல்வித்துறை பட்டப்படிப்பை ஆரம்பிக்க நடவடிக்கை எடுங்கள்!

## யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், நவ 9

விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்களில் முன்னேற்றத்தைக் காண்பதற்கு துறைசார் வல்லுநர்களை உருவாக்கும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உடற்கல்வித் துறையில் பட்டப்படிப்பை தொடங்குவதற்கு விளையாட்டுத் துறை அமைச்சர் தலையிட வேண்டும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.



யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுடனான கிராமியப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் தேசிய வேலைத்திட்டத்தில் சமூக உட்கட்டமைப்புக் குழுவின் கூட்டம் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச தலைமையில் நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

அங்கு கருத்துத் தெரிவித்தபோதே துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில் மானுடவியல், பௌதிக விஞ்ஞானம் ஆகிய துறைகளோடு உடற்கல்வித்துறையையும் ஆரம்பிப்பதற்கு முன்மொழியப்பட்டிருந்தது.

எனினும் கால ஓட்டத்தில் உடற்கல்விப் பட்டப்படிப்பை நடத்துவதற்கு முடியாமல் போய்விட்டது. அதன் பின் உடற்கல்விப் பட்டப் படிப்பைஆரம்பிப்பதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் மூன்று முறை வேண்டுதல்கள் முன்வைக்கப்பட்ட போதிலும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைமை அடிக்கடி மாறிக் கொண்டிருந்ததனால் அது தாமதமாகிறது.

தற்போதைய தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்கவின் காலத்தினுள் அது சாத்தியமாகும் என நம்புகிறோம். விளையாட்டுத் துறை சார்ந்த அமைச்சர் என்ற வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உடற்கல்வியில் பட்டப்படிப்புக் கற்கைநெறியை ஆரம்பிப்பதற்கு. இந்த விடயத்தில் தலையிட்டு உதவி செய்ய வேண்டும். என்றார். (எ)

---

### விபத்தில்...

கத்துக்கு அருகில் ஏ9 வீதியில் நடந்துள்ளது. இந்த விபத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த சிறுவர் உட்பட 3 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் கிளிநொச்சி மருத்துவனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் விபத்து தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (எ-இ)

---

## ஜெயபுரம் பிரதேசம் தற்காலிக முடக்கம்

கிளிநொச்சி, நவ.9

கிளிநொச்சி மாவட்டத்தின் ஜெயபுரம் பகுதியில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளான நபர் தனிமைப்படுத்தலை மீறிச் செயற்பட்டதால் ஜெயபுரம் வடக்கு, தெற்கு பகுதிகள் ஒரு நாள் தற்காலிக சமூக முடக்கலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஜெயபுரம் கிராம சேவையாளர் பிரிவே இவ்வாறு தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளது. மாதிரி பரிசோதனைகள் நடத்துவதற்காகவே இந்தப் பிரதேசம் சுகாதார தரப்பால் தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளது.

இந்தக் கிராமத்திற்கு உட்செல்லல் மற்றும் வெளியேறல் ஆகியன தடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலை பூநகரி பிரதேச செயலாளர் எஸ். கிருஸ்ணேந்திரன் உறுதிப்படுத்தியுள்ளார். (எ-6)

---


32வது பிறந்தநாள் நினைவும்
11ம் ஆண்டு நினைவஞ்சலியும்

செல்வி சிறிரங்கநாதன்
ரஜீவிதா (திசானி)



பிறப்பு 1988.11.09
பறிப்பு 2009.01.24

அதிகாலைத் தென்றலின்
மெல்லிய வருடலாய்
வீட்டின் பக்கச்
சுவர்களில்
தெறித்து கலீர் என்ற
மழலைச் சிரிப்புடன்
இன்னும்
எதிரொலிக்கின்றன..
நீ தவழ்ந்த காலத்தின்
தாலாட்டு ஓசை!...

உன் பிரிவால் துயருறும்
செ. சிறிரங்கநாதன் அப்பா,
அம்மா, அண்ணா, தங்கை.

நி. முகவரி 60. சந்தணமாதாகோவில் வீதி . அரியாலை.
த. முகவரி. 96. குடிமத்தி. D 10. உருத்திரபுரம் கிளிநொச்சி



மரண அறிவித்தல்



தோற்றம் 04 . 03 . 1926
மறைவு 06 . 11 . 2020

சின்னப்பா அருளானந்தம்

அனலைதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட சின்னப்பா அருளானந்தம் அவர்கள் 06.11.2020 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பா (ஸ்தாபகர், ஆசிரியர்) சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சபாபதி சிவகாமி தம்பதியரின் அன்பு மருமகனும், புவனேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், பாலசுப்பிரமணியம், சச்சிதானந்தம், குணபாலா, தயாபரன், குமுதினி, யாழினி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான பொன்னையா, தில்லையம்பலம், வேலுப்பிள்ளை மீனாட்சிப்பிள்ளை, பத்தினிப்பிள்ளை, சிவக்கொழுந்து, நாகமுத்து, சோமசுந்தரம், பொன்னம்மா, பசுபதி, மங்கையர்க்கரசி மற்றும் பரஞ்சோதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், றமணீஸ்வரி, சாந்தமலர், கோமதி, மாலதி, ஸ்ரீகரன், சிவானந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.11.2020 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குணபாலா-கோமதி



மரண அறிவித்தல்



பிறப்பு 20 . 12 . 2000
மறைவு 08 . 11 . 2020

பாலசுப்பிரமணியம் நிபோஜனா
(சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி
2019 A/L பழைய மாணவி)

நிற்சாமம் சங்கானையை பிறப்பிடமாகவும் கூவில் கீரிமலையை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் நிபோஜனா அவர்கள் நேற்று (08.11.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னார் பாலசுப்பிரமணியம் சுவேந்திரா தம்பதியரின் அன்பு மகளும், துஷ்யந்தன், நிபோயன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.11.2020) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொப்பளாவளை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.


## போதிய மழை இல்லை: விவசாயிகள் கவலை

கொடிகாமம், நவ.9

தென்மராட்சி பிரதேசத்தில் காலபோக நெற்செய்கை விதைப்புக்கு பின்னர் உரிய நேரத்தில் மழை பெய்யாததால் நெற்பயிர்கள் அனைத்தும் களைகளால் மூடப்பட்டுள்ளன என்று நெற்செய்கையாளர்கள் தெரிவித்தனர் கடந்த இரண்டு நாள்களாக மழை பெய்த போதிலும் பயிருக்கேற்ற நீர் இல்லாததால் பயிர்களை மூடியுள்ள களைகளை அழிப்பதற்காக மருந்து விசிறல் மற்றும் களைபிடுங்கல் வேலைகளை மேற்கொள்ள முடியவில்லை எனவும் நெற்செய்கையாளர்கள் தெரிவித்தனர். (எ-159)

## போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்
## வாகன சுத்திகரிப்புச் சேவைகளிற்கான
## கேள்வி விலை கோரல் - 2021

1. யாழ் போதனா வைத்தியசாலை பெறுகைக்குழுவின் தலைவரினால் 2021ம் வருடத்திற்கான யாழ். போதனா வைத்தியசாலை வாகனங்களிற்கு சுத்திகரிப்புச் சேவையினை வழங்குவதற்கு விருப்பமுடைய வழங்குநர்கள் / ஒப்பந்தக்காரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் என்பனவற்றிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.
2. கேள்வி மனுதாரர் வாகன சுத்திகரிப்புச் சேவைக்குரிய வியாபார அனுமதிப் பத்திரத்தின் பிரதியுடன், கேள்வி ஆவணக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூபா 1000.00 ஐ யாழ். போதனா வைத்தியசாலை அலுவலகக் காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டையும், தேசிய அடையாள அட்டையையும் சமர்ப்பித்து கேள்வி விண்ணப்பங்களை 2020.11.10 முதல் 2020.11.24 வரை மு.ப. 9.00 – பி.ப 3.00 மணிவரை யாழ். போதனா வைத்தியசாலையின் வைத்திய சாலை அலுவலக அறையில் பெற்றுக்கொள்ளலாம்.
3. கேள்விதாரர்கள் மீளளிக்கப்படக்கூடிய வைப்புக்கட்டணமாக **(Bid Bond)** ரூபா **50000.00** ஐ அலுவலகத்தில் செலுத்தி அதனுடைய பற்றுச்சீட்டின் மூலப் பிரதியையும் கேள்வி விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.
4. கேள்வி விண்ணப்பங்களின் மூலப்பிரதியினை தயார் செய்து தபாலுறையிலிட்டு முத்திரை பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் ***"வாகன சுத்திகரிப்புச் சேவைகளிற்கான கேள்வி விலை கோரல் - 2021"*** எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
5. பூரணப்படுத்திய கேள்வி ஆவணங்களை 2020.11.25 திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பியோ அல்லது யாழ். போதனா வைத்தியசாலை கணக்காளர் அறையில் வைக்கப் பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டோ கிடைக்கச் செய்தல் வேண்டும்.
6. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற உடனேயே அவை அவ்விடத்திலேயே திறக்கப்படுவதுடன் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவருக்கு அவ்வேளையில் சமூகமளிப்பதற்கு அனுமதி வழங்கப்படும்.
7. கேள்வி ஆவணங்களை யாழ். போதனா வைத்தியசாலை அலுவலக அறையில் இலவசமாக பார்வையிடலாம்.
8. அரசாங்க ஒப்பந்த நிபந்தனைகளை மீறி அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளவர்களுக்கு கேள்வி ஆவணங்கள் வழங்கப்படமாட்டாது.
9. குறித்த கேள்வியை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக்குழுவைச் சார்ந்தது.
10. மேலதிக விபரங்களுக்கு யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியசாலைச் செயலாளரை 021 222 7351 எனும் தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,
பிராந்திய பெறுகைக் குழு,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

தோற்றம்
18 . 07 . 1946



மறைவு
08 . 11 . 2020

### திருமதி கோகிலஇசைவாணி சிவசுப்பிரமணியம்

சுழிபுரம் மேற்கு சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கோகிலஇசைவாணி சிவசுப்பிரமணியம் நேற்று (08.11.2020) பிற்பகல் இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், மாரிமுத்து ஆகியோரின் அன்பு மகளும், ரவிசங்கர், மைதிலி, காலஞ்சென்ற சிவ சங்கர் ஆகியோரின் பாசமிகு தாயாரும், அனித்தா, தயாநிதி ஆகியோரின் அன்பு மாமியாரும், ஷகில், விருத்திகா, குகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற ரஞ்சிதவாணி (பேபி), அருட்கலைவாணி (தேவி), விக்னேஸ்வரி (ராசா) ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ் சென்ற கனகலிங்கம், இராசையா, திருச்செல்வம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2020) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சுழிபுரம் மேற்கு,**
**சுழிபுரம்.**

**தகவல்:**
**மகன்- சி. ரவிசங்கர்**
**0777 42 0000**

முதலாம் பக்க தொடர்ச்சி...

### குளத்துக்குள்...

ஒன்றின் அடிப்படையில் இந்தச் சிலைகள் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

முருகன், மயில்கள் சிலைகள், கலசம் போன்றவையே மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சிலைகள் பல ஆண்டுகளுக்கு முற்பட்ட சிலைகளாக இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

இந்தச் சிலைகள் இந்தியாவுக்குக் கடத்தும் நோக்குடன் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்றும், இவை மறைத்து வைக்கப்பட்டு நீண்ட காலமாகியிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மீட்கப்பட்ட சிலைகள் மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்றும், இது தொடர்பான விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-26)

## உடனடி வேலைவாய்ப்பு

இலங்கையின் முன்னணி உணவுப் பொருள் உற்பத்தியின் யாழ்மாவட்ட முகவராக செயற்படும் எமக்கு அனுபவம் வாய்ந்த விற்பனை பிரதிநிதி தேவை.
அடிப்படை சம்பளம் மற்றும் தரகு பணம்:
30,000 - 50,000 வரை பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:
**076 804 2006, 076 398 1999**
**141/2, K.K.S. Road, Jaffna.**

## ஆறாமாண்டு நினைவஞ்சலி

தாய் மடியில்
01 . 08 . 1946



இறை அடியில்
09 . 11 . 2014

### அமரர் யோசவ் பிரான்சீஸ் சேவியர்

"என்னில் நம்பிக்கை கொள்பவர்
இறப்பினும் வாழ்வார்"

கண்மூடித் திறப்பதற்குள்
ஆண்டுகள் ஆறு ஆகியதோ? ஆறவில்லை மனது.
உங்கள் அன்பு முகம் காண,
கம்பீரமும் கனிவும் நிறைந்த குரல் கேட்க,
கூடி வாழ்ந்த அந்த நாட்கள் மீண்டும்
வாராதா எனத் தவிக்கின்றோம்
இறை சந்நிதியில் நீங்கள்
அமைதியில் இளைப்பாறச் செபிக்கின்றோம்.
எங்களுக்காக இறையாசீர் வேண்டிடுவீர்.

என்றும் கண்ணீருடன்...

**27/18, புங்கன்குளம் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**குடும்பத்தினர்.**

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் புவேந்திரா இராஜக்கோன்

(அரசாங்க மருந்தாளர்)

மலர்வு
01.09.1941

உதிர்வு
09.11.2013

எங்கள் உயிரில் கலந்த உறவே !
இம்மையில் உங்களை நேசித்தோம்
மறுமையில் உங்களை மறவோம்.

குடும்பத்தினர்.

**தபாற்கந்தோர் முன்பாக**
**ஏழாலை வடக்கு, ஏழாலை.**

### அறிவித்தல்
## பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோருதல்
## மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
## வடக்கு மாகாணம்

வடக்கு மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (குடிசார்) தரம் III மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (குடிசார் மற்றும் படவரைஞர்) பயிற்சித் தரம் ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2020

தமிழ் மற்றும் சிங்களம் மொழி மூலம் மேற்படி பதவிகளுக்குரிய போட்டிப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளது. இப் பதவி வெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் நிரப்பப்படும். இந்த விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2020.12.09ஆகும்.

விண்ணப்பதாரிகள் www.np.gov.lk →Recruitment and Exam → Advertisement என்ற வடக்கு மாகாண இணையத்தளத்தில் மேலே குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் தொடர்பான விபரங்களை பார்வையிட்டு தகைமையுடையவர்கள் அம் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

சி. திருவாகரன்
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்குமாகாணம்.
09.11.2020

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 02 . 10 . 1939

மறைவு 08 . 11 . 2020

### ஆறுமுகம் இராசநாயகம்

**(ஓய்வுநிலை இலங்கை வங்கி முகாமையாளர், தலைவர்-நீர்வேலி நலன்புரிச் சங்கம் கனடா, நீர்வேலிக்கிளை)**

ஆறுமுகம் இராசநாயகம் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைந்தோம். ஆரம்ப காலம் முதல் நீர்வேலி நலன்புரிச் சங்க நீர்வேலி அமைப்பின் தலைவராக இருந்து நீர்வேலி பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கும் பாடசாலைகளின் கல்வி மேம்பாட்டிற்கும் பணியாற்றினார். அவரது இழப்பு ஈடு செய்யமுடியாத ஒன்றாகும்.

அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நீர்வேலி நலன்புரிச் சங்கம்**
**கனடா.**

## மரண அறிவித்தல்



தோற்றம் 12 . 10 . 1961

மறைவு 02 . 11 . 2020

### சுப்பையா தனபாலசிங்கம்

யாழ் நெடுங்கேணி வேலங்குளத்தை பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா தனபாலசிங்கம் அவர்கள் கடந்த (02.11.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா கண்ணகை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கனகசபை கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சாந்தகுமாரி அவர்களின் அன்புக் கணவரும், தினேஸ், சாயீஷ், தனுஷ் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தவராசா (வேலன் குளம்), மனோன்மணி (நீர்வேலி), தெய்வேந்திரம்பிள்ளை (France), தன லட்சுமி (முள்ளியவளை), சறோஜா (நீர்வேலி), சிவானந்தம் (வேலங்குளம்), கோணேசமூர்த்தி (வேலங்குளம்), மனோரஞ்சிதமலர் (வேலங்குளம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தேவநாயகம், சிவஞானம், அமிர்தநாயகம், அரியநாயகம், செல்வநாயகம், பரமநாயகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2020) திங்கட்கிழமை (71 Rue des Rondeaux, 75020 Paris, France) நேரப்படி 8.45 AM-9.15 AM நடைபெற்று, தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி மத்தி நீர்வேலியில் அமைந்துள்ள சகோதரி மனோன்மணி பாலசிங்கம் இல்லத்தில் அன்னாரின் துயர்பகிர்வு நிகழ்வு நடைபெறுகின்றது என்பதை அறியத்தருகின்றோம்.

**தகவல்:**
**சகோதரி : பாலசிங்கம் மனோன்மணி**
**தொடர்பு இல: 077 310 2615**

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 03 . 10 . 1933

மறைவு 02 . 11 . 2020


### திரு. முத்து சுந்தரமூர்த்தி J.P ( சித்தப்பா )

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திரு . முத்து சுந்தரமூர்த்தி அவர்கள் கடந்த ( 02.11.2020 ) திங்கட்கிழமை கனடாவில் காலமாகிவிட்டார். அன்னாரின் பூதவுடல் நேற்று ஞாயிற்றுக்கிழமை ( 08.11.2020 ) கனடா நேரப்படி மாலை 2 மணிமுதல் மாலை 7 மண்ணிவரை " AETERNA FUNARAL COMPLEX, 55, RUE GINCB, SAINT - LAURENT, 44 NIJ 7 " இல் வைக்கப்பட்டு இன்று 09.11.2020 திங்கட்கிழமை பிற்பகல் 1 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும் .

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம் .

**தகவல் : யூட் குடும்பத்தினர் - வவுனியா**

## மரண அறிவித்தல்



தோற்றம் 02 . 10 . 1939

மறைவு 08 . 11 . 2020

### ஆறுமுகம் இராசநாயகம்

**(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முகாமையாளர்)**

நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் இராசநாயகம் அவர்கள் நேற்று (08.11.2020) காலை இறைபதம் அடைந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் நாகம்மா தம்பதியரின் சிரேஸ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான சிவராஜா மூத்தம்மா தம்பதியரின் மருமகனும் யோகலட்சுமி (சுசீலா) அவர்களின் அன்பு கணவரும் தயாபரன், தயானந்தி, பராபரன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், திவாகரன், சர்மிளா, விஜயலதா ஆகியோரின் மாமனாரும், தனஞ்செயன், இந்துஜா, நித்தியா, கார்த்திகா, லக்ஷியா, சாகித்தியா, கார்த்தீபன் ஆகியோரின் பேரனாரும் காலஞ்சென்ற செல்வராணி மற்றும் சபாநாயகம், குலேந்திரநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான நமச்சிவாயம், கோடீஸ்வரி மற்றும் உருத்திரராணி, சற்குணலிங்கம், இந்திராதேவி, சந்திராதேவி, சிந்தாதேவி, ஜெயக்குமார், சாந்தகுமார், அஞ்சலிதேவி, நிறஞ்சலிதேவி, சிவகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2020) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்.**
**கரந்தன் வீதி, நீர்வேலி தெற்கு, நீர்வேலி.**
**021 223 0058**

## மரண அறிவித்தல்

### பொன்னுத்துரை மகேஸ்வரன்



தோற்றம் **03.03.1956**

மறைவு **07.11.2020**

வயாவிளானைப் பிறப்பிடமாகவும் ஏழாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை மகேஸ்வரன் கடந்த (07.11.2020) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை- ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை- நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பார்வதிதேவியின் (இளைப்பாறிய ஆசிரியர், ஏழாலை மகாவித்தியாலயம்) அன்புக் கணவரும், காலஞ்சென்ற தங்கேஸ்வரன் மற்றும் சகுந்தலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், அருட்குமரன் (லண்டன்), பார்த்தீபன் (லண்டன்), பிரியங்கா ஆகியோரின் அன்பு சிறிய தந்தையும், மனோஜின் (டென்மார்க்) பெரிய தந்தையும், கோகுல கீர்த்தன் (லண்டன்), துவாரகன் (பொறியியல் பிரிவு மாணவன் மொறட்டுவ), கபி (ஜேர்மனி), சயன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற சிவஞானம் மற்றும் சிவபாதம் (ஜேர்மனி), சரஸ்வதிதேவி, புஸ்பராணி (டென்மார்க்), ஜெயரூபன் (டென்மார்க்), சிவநேசன், நிர்மலாதேவி, சுமதி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2020) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்.**
**பார்வதிதேவி (மனைவி)**
**076 274 9819**

## 10,000 கடந்தது....

நாட்டில் நேற்றும் 510 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர்களுடன் சேர்த்து நாட்டில் கொரோனாவின் மூன்றாவது அலையில் சிக்கி பாதிப்படைந்தவர்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்து 455 ஆக உயர்ந்துள்ளது. கடந்த இரு மாதங்களிலேயே இவர்கள் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர். அதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 929 ஆக அதிகரித்துள்ளது. கொரோனா வைரஸ் தொற்றாளர்களில் 5 ஆயிரத்து 609 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 8 ஆயிரத்து 285 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 35 பேர் உயிரிழந்துள்ளனர்.

நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டங்கள் நீக்கப்படுகின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், மேல்மாகாணத்தில் கொரோனாத் தொற்று அச்சுறுத்தல் அதிகமாக இருக்கும் பிரதேசங்களை இனங்கண்டு, போக்குவரத்தை வரைறுக்க முறையான வேலைத்திட்டம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. எவ்வித ஆய்வுகளும் இல்லாது ஊரடங்குச் சட்டங்களை நீக்குவதால் கொரோனாத் தொற்று நாடு முழுவதும் பரவக்கூடிய அபாயம் இருக்கின்றது என்று அந்தச் சங்கத்தின் முன்னாள் செயலாளர் மருத்துவர் ஹரித அளுத்கே சுட்டிக்காட்டியுள்ளார். (ஏ-22)

## கொரோனா சாவு...

ணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. அவருக்கு கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. கொரோனாத் தொற்றுடன் ஏற்பட்ட மாரடைப்பே குறித்த நபர் உயிரிழப்பதற்குக் காரணம் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

தற்போது இலங்கையில் கொரோனா வைரஸ் இறப்பு எண்ணிக்கை 35 ஆக உயர்ந்துள்ளது. (ஏ-22)

## பைடன்...

பெற முடியாத அதிகாரப் பகிர்வின் அடிப்படையில் அரசியல் தீர்வு ஏற்படுவதற்கு ஜோ பைடனும் கமலா ஹரிஷும் உதவுவார்கள் என்று நாங்கள் நம்புகின்றோம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிட்ட ஜோ பைடன், 290 தொகுதிகளைக் கைப்பற்றி 46ஆவது ஜனாதிபதியாகவும், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கமலா ஹரிஷ் அமெரிக்காவின் முதலாவது பெண் உப ஜனாதிபதியாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களை வரவேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் 'உதயன்' பத்திரிகையிடம் நேற்றிரவு அவர் தெரிவித்ததாவது:

2009ஆம் ஆண்டு தமிழர்களின் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேண்டுகோளுக்கிணங்க தமிழர் விவகாரத்தை அமெரிக்காவே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்குக் கொண்டுவந்திருந்தது. அப்போது அமெரிக்காவில் பராக் ஒபாமா தலைமையிலான ஜனநாயகக் கட்சியே ஆட்சியில் இருந்தது. இந்தநிலையில், ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஜோ பைடன் புதிய ஜனாதிபதியாகவும், கமலா ஹரிஸ் உப ஜனாதிபதியாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இது மிகவும் வரவேற்கத்தக்க விடயம். இதையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம்.

இவர்கள் இருவரும் ஜனநாயகவாதிகள். அரசியல் ரீதியில் நீண்ட காலம் அனுபவம் பெற்றவர்கள். ஜோ பைடன், செனட் சபையிலும் இருந்திருக்கின்றார். அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமாவின் ஆட்சிக்காலத்தில் இரண்டு தடவைகள் உப ஜனாதிபதியாகவும் இவர் பதவி வகித்திருக்கின்றார்.

கமலா ஹரிஸ், இந்திய நாட்டைச் சேர்ந்த பெண்ணின் மகள். நீண்ட காலம் அரசியல் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றார். இவர்கள் இருவரும் சமத்துவம், நீதி, நியாயம், மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகளுக்குப் போதிய மதிப்பு வழங்கிச் செயற்படக்கூடிய தலைவர்கள். இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சினைகள் தொடர்பில் நாங்கள் இவர்களுடன் தொடர்புகொண்டு பேசுவோம். இலங்கையில் சமத்துவத்தின் அடிப்படையில் நீதியின் அடிப்படையில் நியாயத்தின் அடிப். படையில் சமாதானத்தின் அடிப்படையில் ஓர் அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும்.

இலங்கைத் தீவில் நீண்டகாலமாக அவ்விதமானதோர் அரசியல் தீர்வு இன்னமும் ஏற்படவில்லை. அதியுச்ச அதிகாரப் பகிர்வின் அடிப்படையில் உறுதியான மீளப் பெற முடியாத அதிகாரப் பகிர்வின் அடிப்படையில் அரசியல் தீர்வு ஏற்படுவதற்கு ஜோ பைடனும் கமலா ஹரிஷும் உதவுவார்கள் என்று நாங்கள் நம்புகின்றோம். ஏனெனில் இவர்கள் உதவக்கூடிய பக்குவம் உடையவர்கள். அதில் ஆற்றல் உடையவர்கள்; அறிவுடையவர்கள் - என்றார். (ஏ-22)

## மிரட்டுகின்றது....

தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சிறைச்சாலையில் எழுமாற்றாக மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் 71 கைதிகளும், சிறைச்சாலை ஊழியர் ஒருவரும் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதையடுத்து வெலிக்கடை சிறைச்சாலையில் கொரோனாத் தொற்று உறுதியானவர்களது மொத்த எண்ணிக்கை 102 ஆக அதிகரித்துள்ளது. அவர்களுள் 89 பெண் கைதிகளும், 11 ஆண் கைதிகளும், சிறைச்சாலை அதிகாரி ஒருவரும், சிறைச்சாலை ஊழியர்கள் அடங்குகின்றனர்.

தொற்றாளர்களான 100 கைதிகளும் வெலிக்கந்தை ஆதார வைத்தியசாலையில் பலத்த பாதுகாப்புடன் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார். அதேவேளை, தொற்றுக்குள்ளான சிறை அதிகாரியும் சிறை ஊழியரும் கொழும்பு தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும் அவர் மேலும் கூறினார். (ஏ-22,44)

## 5,711 கிலோ...

பயன்படுத்த இந்தியப் படகும், அதிலிருந்த இந்திய மீனவர்கள் நால்வரும் திருப்பி அனுப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் இருந்து கடத்தப்பட்ட மஞ்சள் மன்னார், அரிப்புப் பகுதியில் இறக்கப்பட்டபோது கடற்படையினர் முற்றுகையிட்டு மஞ்சளைக் கைப்பற்றியுள்ளனர். அங்கிருந்த இந்திய றோலரில் 4 இந்திய மீனவர்களும், இலங்கையைச் சேர்ந்த இருவரும் இருந்துள்ளனர்.

றோலரில் இருந்த மஞ்சள் முழுமையாக இறக்கப்பட்டு, இலங்கையைச் சேர்ந்த இருவரும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். தற்போதைய கொரோனாத் தொற்று நிலைமையால், இந்திய மீனவர்கள், றோலர் படகுகளுடன் திருப்பி அனுப்பப்பட்டனர். அந்தப் படகில் இருந்து 3 ஆயிரத்து 218 கிலோ மஞ்சள் கைப்பற்றப்பட்டது என்று கடற்படையினர் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட இருவரும் வழங்கிய தகவலின் அடிப்படையில் கற்பிட்டியில் 2 ஆயிரத்து 493 கிலோ கிலோ மஞ்சள் மீட்கப்பட்டது. மொத்தமாக அவர்களிடம் இருந்து 5 ஆயிரத்து 711கிலோ மஞ்சள் மீட்கப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்டவர்கள் 14 நாள்கள் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

முன்னதாக வந்த செய்தியில் இலங்கையர்கள் இருவரும், இந்தியர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் இலங்கையர்கள் இருவர் கைது செய்யப்பட்ட நிலையில், இந்தியர்கள் நால்வரும் திருப்பி அனுப்பப்பட்டனர் என்று பின்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. (ஏ-இ)

(முன்னர் வந்த செய்தி 10ஆம் பக்கத்தில்)

## காலமானார்...

25 ஆண்டுகளுக்கும் மேலாக ஐ.நாவின் அமைப்புகளுடன் பணியாற்றியுள்ள சுபினே நந்தி, 2011 முதல் 2016ஆம் ஆண்டு வரை இலங்கையில் பணியாற்றியுள்ளார்.

இந்தக் காலப்பகுதியில் இலங்கையில் நல்லிணக்கத்தை நோக்கிய நீடித்த அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் செழிப்பை வளர்ப்பதில் ஐ.நாவின் முயற்சிகளுக்கு தலைமை தாங்கியதுடன், ஐ.நா. சபையில் இலங்கைக்கான சட்ட ஆலோசகராகவும் கடமையாற்றியுள்ளார். அவர் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியாக நியமிக்கப்பட முன்னர் சீனா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளுக்கான ஐ.நா. வளர்ச்சித் திட்டத்தின் பிராந்தியப் பணிப்பாளராகப் பணியாற்றினார்.

அத்துடன் இவர் ஆசிய மற்றும் பசுபிக் நாடுகளுக்கான ஐ.நா. வளர்ச்சித் திட்டத்தின் பிராந்திய பணியகத்தில் பிராந்திய திட்டம் மற்றும் கொள்கை பிரிவின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

துர்க்மெனிஸ்தானுக்கான துணை வதிவிடப் பிரதிநிதியாகவும், பங்களாதேஷ் நாட்டுக்கான உதவி வதிவிடப் பிரதிநிதி யாகவும் பணியாற்றியுள்ளார். (ஏ-22)

## கிராம அலுவலர்...

னர் ஒருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர். ஆடு மேய்ப்பவர் ஒருவர் வழங்கிய தகவலின் அடிப்படையிலே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் நிர்வாக கிராம அலுவலராகக் கடமையாற்றும் விஜி என அழைக்கப்படும் எஸ்.விஜியேந்திரன் (வயது-55) என்பவர் அடித்துக் கொலை செய்யப்பட்டார்.

இந்தக் கொலைச் சம்பவம் கடந்த 3ஆம் திகதி நடந்தது. இரவு 8 மணியளவில் கடமை முடிந்து விஜியேந்திரன் தனது வீடு நோக்கி சென்றுள்ளார். அதன்பின்னர் ஆத்திமோட்டை கள்ளியடியில் தலையில் பலத்த காயங்களுடன் சுயநினைவற்ற நிலையில் காணப்பட்டார்.

அவர் உடனடியாக பள்ளமடு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மன்னார் மருத்துவமனைக்கு மாற்றம் செய்யப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்தார். மன்னார் பொது வைத்தியசாலை சட்ட மருத்துவ அதிகாரி எஸ்.பிரணவன் முன்னிலையில் உடற்கூற்றுப் பரிசோதனை நடைபெற்றது. நிர்வாக கிராம அலுவலரின் தலையில் மொட்டையான ஆயுதம் ஒன்றால் பல தடவைகள் தாக்கப்பட்டுள்ளது என்றும், அதனால் அவர் உயிரிழந்தார் என்றும் சட்ட மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

சம்பவம் தொடர்பில் இலுப்பக்கடவை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். நிர்வாக கிராம அலுவலர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், சம்பவம் நடந்த சிறிது நேரத்தில் பெண் கிராம அலுவலர் ஒருவர் பிரதேச செயலாளருக்கு அறிவித்துள்ளார். அது தொடர்பில் எழுந்த சந்தேகத்தின் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். ஆடு மேய்க்கும் ஒருவரும் கிராம அலுவலர் தாக்கப்படும்போது அந்த இடத்தில் இருந்துள்ளார். ஆடு மேய்ப்பவர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டார். அவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் பெண் கிராம அலுவலரின் கணவர் நேற்று கைதுசெய்யப்பட்டார். சந்தேகத்தின் அடிப்படையில் அவரது உறவினர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தின் போது சந்தேகநபர் அணிந்திருப்பார் என்று சந்தேகிக்கப்படும் குருதிக் கறை படிந்த சேட் ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

அதேவேளை, சம்பவம் இடம்பெற்றபோது தான் மருத்துவர் ஒருவரிடம் சிகிச்சை பெறச் சென்றிருந்தேன் எனச் சந்தேகநபர் தெரிவித்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். கொல்லப்பட்ட நிர்வாகக் கிராம அலுவலகர் பெரும் தொகை பணத்தை பெண் கிராம அலுவலருக்கு கைமாற்றாக வழங்கியுள்ளார் என்று கூறப்படுகின்றது. இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக தொடர்ந்தும் விசாரணைகள் நடைபெறுகின்றன என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (ஏ-இ)

## முல்லை...

முல்லைத்தீவு, நவ.9

முல்லைத்தீவு கல்வி வலயத்தில் இருந்து கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் தொடர்ச்சியாக இடமாற்றம் செய்யப்படுகின்றபோதும், அவர்களுக்கு பதிலாகப் புதிய நியமனங்கள் வழங்கப்படுவதில்லை என்று முல்லைத்தீவு மாவட்டக் கல்விச் சமூகத்தினர் விசனம் தெரிவித்துள்ளனர்.

விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர். பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஒருவரும் மருத்துவக் காரணங்களால் இணைப்பில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடமையாற்றுகின்றார்.

இடமாற்றம் பெற்றுச் செல்பவர்களின் வெற்றிடங்களுக்குப் புதியவர்கள் நியமிக்கப்படாத நிலையில், தற்போது உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஒருவருக்கும் இடமாற்றல் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று முல்லைத்தீவு மாவட்டக் கல்விச் சமூகத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர். முல்லைத்தீவு வலயம் கல்வி தற்போது அடைவிலும், இணைபாடச் செயல்பாடுகளிலும் முன்னேற்றம் கண்டுள்ள நிலையில், பதிலீடு இன்றி இடமாற்றம் செய்வது கல்வி வீழ்ச்சிக்கு வித்திடும் என்றும் அவர்கள் கவலை தெரித்துள்ளனர். முல்லைத்தீவு வலயத்தில் இருந்து இடமாற்றம் செய்யப்பட்டவர்களுக்குப் பதிலாக புதியவர்களை வடக்கு மாகாண கல்வி அமைச்சு நியமிக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். (ஏ-இ)

# அனைத்து அமெரிக்கர்களின் பாதுகாப்பே எனது இலக்கு!

## வெற்றி உரையில் ஜோ பைடன் தெரிவிப்பு

**வொஷிங்டன், நவ. 9**
**அமெரிக்காவிலுள்ள ஒவ்வொருவரின் பாதுகாப்பே எனது இலக்கு. வாய்ப்புகள் அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்படும் என அமெரிக்காவின் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.**




தேர்தல் வெற்றி உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் ஆற்றிய முதலாவது உரையிலேயே அவர் இந்த விடயத்தைப் பதிவு செய்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
பிளவை ஏற்படுத்தாமல் ஒற்றுமைக்கான ஜனாதிபதியாக செயற்படுவேன். எவரையும் கைவிடாத அமெரிக்காவை நாம் உருவாக்கப் போகின்றோம்,
ஒட்டுமொத்த அமெரிக்காவும் அநீதிக்கு எதிராக நின்றுள்ளது. நாட்டு மக்களின் நம்பிக்கையை வெல்வதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படத் தயாராகவுள்ளேன். மத்திய வர்க்கத்தினரை வலுப்படுத்துவதன் மூலம் அமெரிக்காவின் கௌரவத்தை மேலும் உயர்த்த வைப்பதே எமது நோக்கம்.
ஆட்சியைப் பொறுப்பேற்றவுடன் எமது திட்டங்கள் அனைத்தும் அறிவியல் பூர்வமாக இருக்கும். கொரோனாவை கட்டுப்படுத்துவதற்கே முன்னுரிமை. நாடாளுமன்றத்தில் அனைவரும் ஒன்றிணைந்து ஆக்கபூர்வமாக செயல்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.
ஜோ பைடன், ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றும்போது அவரது பாரியார் ஜில் பைடன் மற்றும் துணை ஜனாதிபதி வேட்பாளரான கமலா ஹரிஸ் ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர். (வ-இ)






அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜோ பைடன் வெற்றி பெற்றதையடுத்து அவரின் ஆதரவாளர்கள் மிகுந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வருகின்றனர். நாடெங்கிலும் வெற்றிக் கொண்டாட்டங்கள் இடம்பெறுகின்றன. (ம-இ)

### அமெரிக்காவில்
## ஒரு கோடி மக்களுக்கு தொற்றியது கொரோனா

நியூயோர்க், நவ. 9
அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு கோடியைக் கடந்துள்ளது.
ஒரு கோடியே 58 ஆயிரத்து 586 பேர் வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
நேற்று முன்தினம் மாத்திரம் ஒரு இலட்சத்து 32 ஆயிரத்து 540 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
நாளொன்றில் பதிவான அதிக தொற்றாளர்களின் எண்ணிக்கை இதுவாகும். (வ-இ)

## மெலனியா - ட்ரம்ப் விரைவில் விவாகரத்து

### முன்னாள் உதவியாளர் தகவல்

வொஷிங்டன், நவ. 9
அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்துள்ள ட்ரம்பை அவர் மனைவி மெலனியா விவாகரத்து செய்ய முடிவெடுத்து விட்டார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.



வெள்ளைமாளிகையில், மெலனியாவின் முன்னாள் உதவியாளர் ஓமரோசா மனிகவுல்ட் நியூமனே இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார். அவர் கூறியிருப்பதாவது, மெலனியா ட்ரம்ப்பின் 15 ஆண்டுகால திருமண பந்தம் முடிந்துவிட்டது. ட்ரம்ப் பதவியில் இருக்கும்போது, வெளியேறினால் அது அவருக்கு பெரும் அவமானமாகப் போய்விடும். அதனால்தான், மெலானியா நாள்களை கடத்திக் கொண்டிருந்தார். இனிமேல், ட்ரம்பை மெலனியா விவகாரத்துச் செய்து விடுவார். இதற்காகவே அவர் காத்திருக்கிறார் எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)

## உடல்ரீதியான வதைக்கு ஸ்கொட்லாந்தில் தடை



ஸ்கொட்லாந்தில் சிறுவர்களுக்கு உடல்ரீதியான தண்டனைகளை வழங்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அந்தச் சட்டத்தின் மூலம் 16 வயதுக்குட்பட்ட சிறுவர்களை அவர்களது பெற்றோர் மற்றும், சிறுவர் பராமரிப்பு மையங்களில் உடல்ரீதியான துன்புறுத்தல்கள் மூலம், தமது பணிகளைச் செய்வதற்கு வற்புறுத்த முடியாது.
இந்தச் சட்டம் 1979ஆம் ஆண்டு முதன்முறையாக சுவீடனில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்நிலையில் சர்வதேச ரீதியாக இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் 58ஆவது நாடாக ஸ்கொட்லாந்து பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)






அரிஷோனாவில் வாக்கு எண்ணிக்கையில் மோசடி நடந்துள்ளது எனத் தெரிவித்து டொனால்ட் ட்ரம்ப்பின் ஆதரவாளர்கள் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் அங்கு பதற்ற நிலை தொடர்கிறது. (வ-இ)

# இறுதிக்குள் டெல்லி

## ஹைதராபாத்தை மண்டியிட வைத்து தகுதி





அபுதாபி, நவ. 9
ஐ.பி.எல் தொடரில் நேற்று நடைபெற்ற 2வது தகுதி காண் ஆட்டத்தில் ஹைதராபாத்தை 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இறுதிக்குள் நுழைந்தது டெல்லி. அபுதாபியில் நடைபெற்ற ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற டெல்லி கப்பிடல்ஸ் அணி முதலில் துடுப்பாட்டத்தை தெரிவுசெய்தது. ஆரம்ப வீரர்களாக சகலதுறை வீரர் ஸ்ரோய்னிஸ் - தவான் இணை களம் புகுந்தது. இருவரும் இணைந்து ஹைதராபாத் அணியின் பந்து வீச்சாளர்களை கதிகலங்க வைத்தனர்.

இணைப்பாட்டமாக 86 ஓட்டங்கள் பெற்றவேளை ஸ்ரோய்னிஸ் 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த ஸ்ரேயாஸ் ஐயர் 21 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். அதிரடியாக விளையாடிய தவான் அரைச்சதம் கடக்க அவருடன் இணைந்த ஹெட்மயர் தனக்குரிய பாணியில் பந்துகளை பவுண்டரிக்கு விரட்டினார். இருபது ஓவர்கள் நிறைவில் டெல்லி அணி 3 இலக்குளை மாத்திரம் இழந்து 189 ஓட்டங்களை குவித்தது. துடுப்பாட்டத்தில் தவான் (78), ஹெட்மயர்(42), பண்ட் (2) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் சந்தீப் சர்மா , ஹோல்டர் , ரசிட் கான் தலா ஒவ்வொரு விக்கெட்களை வீழ்த்தினர்.

190 என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய ஹைதராபாத் அணிக்கு ஆரம்பமே வோர்ணரை போல்ட் செய்து அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தார் றபாடா. தொடர்ந்து இணைந்த பிரியம் ஹறாக், மனிஷ் பாண்டே இணையை ஒரே ஓவரில் அடுத்தடுத்து வெளியேற்றினார் ஸ்ரோய்னிஸ் . தொடர்ந்து களம் புகுந்த ஹோல்டர் 11 ஓட்டங்களுடன் வேகமாக பவிலியன் திரும்பினார். நிதானமாக துடுப்பெடுத்தாடிய வில்லியம்சன் அரைச்சதம் கடந்து 67 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மத்திய வரிசையில் சிறப்பாக ஆடிய அப்துல் சமாட் 33 ஓட்டங்களுடன் ரஷிட்கான்(11), கோஸ்வாமி(0) ஓட்டங்களுடனும் றபாடாவின் பந்துவீச்சில் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். ஹைதராபாத் அணி இருபது ஓவர்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்று 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டெல்லியிடம் வீழ்ந்தது. பந்துவீச்சில் றபாடா 4 இலக்குகளையும் ஸ்ரோய்னிஸ் 3 இலக்குகளையும் அக்சர் பட்டேல் 1 இலக்கையும் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக ஸ்ரோய்னிஸ் தெரிவுசெய்யப்பட்டார்.

இவ் வெற்றியின் மூலம் இறுதிக்குள் நுழைந்த டெல்லி கப்பிடல்ஸ் அணி நாளையதினம் டுபாய் மைதானத்தில் 13 ஆவது ஐ.பி.எல் கிண்ணத்துக்காக மும்பை இந்தியன்ஸ் அணியுடன் பலப்பரீட்சை நடத்தவுள்ளது. (ரி4)



# கோலிக்காக சேவாக் குரல்

புதுடில்லி, நவ.9
பெங்களூர் அணித் தலைவர் பதவியில் இருந்து கோலியை நீக்கத் தேவையில்லை. ஏனைய வீரர்களைத்தான் மாற்ற வேண்டும் என்று இந்திய அணியின் முன்னாள் வீரர் சேவாக் தெரிவித்துள்ளார்.

பெங்களூர் அணித் தலைவர் பதவியில் இருந்து விராட் கோலியை நீக்க வேண்டும் என்று இந்திய அணியின் முன்னாள் வீரர் கம்பீர் தெரிவித்த கருத்துக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

விராட் கோலி தலைமையிலான பெங்களூர் அணியின் ஐ.பி.எல். கனவு இந்த ஆண்டும் தகர்ந்தது. கடந்த 8 வருடங்களாக அவரால் ஐ.பி.எல். கிண்ணத்தைப் பெற்றுக்கொடுக்க முடியவில்லை.

தோல்விக்கு அவரே பொறுப்பு ஏற்க வேண்டும். பெங்களூர் அணி நிர்வாகம் அவரை அணித் தலைவர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று கம்பீர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சேவாக் தெரிவித்துள்ளதாவது: அணித் தலைவருக்கு ஒரு நல்ல அணி என்பது மிகவும் முக்கியமானது.

பெங்களூர் அணி நிர்வாகம் கப்டன் பதவியிலிருந்து கோலியை நீக்கக் கூடாது. அணியை எப்படி மேம்படுத்துவது என்பதில் தான் கவனம் செலுத்தவேண்டும். பெங்களூர் அணியில் மாற்றம் தேவை.

தகுதி வாய்ந்த வீரர்களை அணிக்கு கொண்டுவர வேண்டும். வீரர்களின் மாற்றம்தான் பெங்களூர் அணிக்கு அவசியம் ஆனது. அணித் தலைவரை நீக்கினால் எந்தத் தீர்வும் கிடைக்கப் போவதில்லை - என்றார். (ற)

# நிதி நிறுவன உரிமையாளர் தப்பிச் செல்ல உதவினாரா?

## வல்வெட்டித்துறை வாசி பொலிஸ் கட்டுப்பாட்டில்

யாழ்ப்பாணம், நவ.9
பண மோசடியில் ஈடுபட்டு இந்தியாவுக்குத் தப்பி சென்ற தனியார் நிதி நிறு வன உரிமையாளரின் குடும்பத்தை படகில் ஏற்றிச்சென்றவர் என்று கருதப்படும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சந்தேக நபர் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார். அவர் இந்தியாவுக்குச் சென்று வந்திருக்கலாம் என்ற அடிப்படையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

முகம்மது அன்சாரி (வயது 45) அவரது மனைவி சல்மா பேகம் (வயது 35) இவர்களது 10 வயது மகன் ஆகியோரே கோடியக்கரை சவுக்குக் காட்டில் கரையேறியபோது கைதுசெய்யப்பட்டனர். இந்த மூன்று பேரையும் வேதாரண்யம் கடலோர காவல் படையினர் கைது செய்து தமிழக பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். அவர்களிடம் நடத்திய முதல் கட்ட விசாரணையில் தொழிலில் ஏற்பட்ட நஷ்டம் காரணமாக இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு அகதியாக வந்ததாக தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலமாக கிழக்கு மாகாணத்தில் நிதி நிறுவனம் ஒன்று நடத்தி கோடிக்கணக்கான ரூபா வைப்புக்களை மோசடி செய்து தலைமறைவான நிலையில் பல்வேறு பிரதேசங்களில் நீதிமன்றங்களில் இவருக்கு எதிராக வழக்குகள் நிலுவையில் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதி நிறுவன உரிமையாளரை யாழ்ப்பாணத்திலிருந்து படகில் அழைத்துச் சென்று இறக்கினார் என்ற குற்றச்சாட்டில் வல்வெட்டித்துறை தொண்டமனாறு பகுதியைச் சேர்ந்த ஒருவர் அவரது வீட்டில் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார். அவர் இந்தியாவுக்குச் சென்று வந்திருக்கலாம் என்ற அடிப்படையில் வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டு பி.சி.ஆர் பரிசோதனைக்கு உள்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர், தமிழகப் பொலிஸாரிடம் நிதி நிறுவன உரிமையாளர் வழங்கிய வாக்குமூலம் கிடைத்ததும் மேற்கொண்டு மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று தெரியவருகின்றது. (ம-26)



# நடால் ஏமாற்றம்

பரிஸ் மாஸ்டர்ஸ் சர்வதேச ரென்னிஸ் போட்டியில் ஸ்பெயின் வீரர் ரபெல் நடால், அலெக்சாண்டர் ஸ்வெரேவ்விடம் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார்.

பரிஸ் மாஸ்டர்ஸ் சர்வதேச ரென்னிஸ் தொடர் பிரான்ஸில் நடைபெற்று வருகின்றது. அதில் நேற்று முன்தினம் நடந்த ஒற்றையர் அரை இறுதி ஆட்டம் ஒன்றில் உலக தரவரிசையில் 2 ஆவது இடத்தில் இருக்கும் ஸ்பெயின் வீரர் ரபெல் நடால் 46, 57 என்ற நேர் செற் கணக்கில் தரவரிசையில் 7 ஆவது இடத்தில் உள்ள அலெக்சாண்டர் ஸ்வெரேவ்விடம் (ஜேர்மனி) அதிர்ச்சித் தோல்வி கண்டு வெளியேறினார். (ற)

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் நீர்வேலி மேற்கு கரந்தன் குறுக்கு வீதியில் (ராசா கடை அருகாமை) 2 3/4 பரப்புக் காணி உள்ளது. மற்றும் 44 பரப்பு உள்ளது. பிரித்து கொடுக்கப்படும். தரகர் தேவையில்லை.

தொடர்பு: **077 805 1655**

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் பலாலி றோட் கோண்டாவிலில் 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. பிரித்து கொடுக் கப்படும். 1 1/2 பரப்பாக. (கோண்டாவில் சந்திக்கு அருகாமை).

தொடர்பு:
**076 888 4625, 077 505 8561**

**காணி விற்பனைக்குண்டு**

யாழ்ப்பாணம் கல்வியங்காடு
நாயன்மார்கள் கேணியடியில் 12
பரப்பு காணி விற்பனைக்குண்டு.
பிரித்துக் கொடுக்கப்படும்.
**2 பரப்பாக**
**தரகர் தேவையில்லை**
தொடர்பு:
**076 436 5814, 074 075 4204**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.11.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.